இது ஒரு மாதாந்த தகவல் மஞ்சரி a monthly information digest

பெப்ரவரி 2023 February | இதழ் 384 Issue

# தமிழர் தகவல்
## TAMILS' INFORMATION

ESTD From The Community To The Community 1991




Premier Canadian Tamil Journal

அனலை எக்ஸ்பிரஸ்





'பாரம்பரியம்'

தமிழர் மரபுரிமை திங்கள்


ஸ்காபரோ



மார்க்கம்

'அ. முத்துலிங்கம் விருது' 2023



மிஸிஸாகா மாதா





கனடிய இரும்புப் பெண்

32nd Year வது ஆண்டில்

சமூகத்துடன் இணைந்த வளர்ச்சி ஸ்தாபிதம் -1991

Growing with the Community ESTD-1991

ISSN 1206-0585

**ஆரம்பம்**
பெப்ரவரி 1991

P.O. Box-3, Station F
Toronto, ON M4Y-2L4,
Canada

**தொலைபேசி:**
416 920 9250

**மின்னஞ்சல்**
tamilsinfo@sympatico.ca

**தயாரிப்பு**
ஈழத்தமிழர் தகவல் நிலையம்
ரொறன்ரோ &
தமிழர் தகவல் ஆய்வுப் பிரிவு

**வெளியீடு**
அகிலன் அசோஷியேற்ஸ்

**முதன்மை ஆசிரியர்**
திரு எஸ். திருச்செல்வம்

**இணை ஆசிரியர்**
றஞ்சி திரு

**உதவி ஆசிரியர் &**
**தயாரிப்பு முகாமையாளர்**
சசி பத்மநாதன்

**உதவி ஆசிரியர்கள்**
குயின்ரஸ் துரைசிங்கம்
அனோஜினி குமாரதாசன்

**பொது முகாமையாளர்**
ஆர். ஆர். ராஜ்குமார்

**பொதுமக்கள் தொடர்பு**
என். விமலநாதன்
என். குமரதாசன்
இ. சிவலிங்கம்
வே. விவேகானந்தன்
ப. சிவசுப்பிரமணியம்

**தொழில்நுட்ப உதவி**
ஹரன்கிறாஃப்

**மாதாந்தம்**
5000 பிரதிகள்

**ஆண்டு மலர்**
6000 பிரதிகள்

**இணையம்**
www.tamilsinformation.info

ஆசிரியரிடமிருந்து... *From the Editor*

# அச்சமூட்டும் கொடுங்கனவு!

மயிர்க்கூச்செறிந்து திகிலூட்டும் சினிமாப் படங்களைக் கண்டுகளிக்க திரையரங்குகளுக்குச் செல்ல வேண்டிய தேவை மாறுகிறது. ரொறன்ரோ நகருக்கு ஒரு தடவை விஜயம் செய்தால் இந்தக் காட்சிகளை கட்டண - மின்றி இலவசமாக நேரடியாகப் பார்க்கலாம்.

பட்டப்பகலில் அப்பாவிப் பொதுமக்கள் மீது துப்பாக்கிச் சூடு, ரயில் தண்ட - வாளத்தில் தள்ளிவிடுவது, திடீரென கத்தியால் குத்துவது, தீ மூட்டுவது, பாலியல் ரீதியான தாக்குதல், தொற்றுநோய்கள் மற்றும் போதைவஸ்துகள் ஏற்றும் ஊசிகளை கைகளில் ஏந்தியவாறு கண்ணில் படுபவர்களை துரத்திச் செல்வது..... இவைகள் இப்போது ரொறன்ரோவில் சாதாரண காட்சிகள்.

போக்குவரத்துப் பேருந்துகளும் பாடசாலைச் சேவைகளில் ஈடுபடும் வாகனங்களும் தாக்குதல் களங்களாகின்றன. சாரதிகள் திடீரென தாக்கப்படுகின்றனர். பேருந்துகளில் பயணிக்கும் பொதுமக்கள் எதுவித காரணமுமின்றி துன்புறுத்தப்படுகின்றனர். கடந்த மாதத்தில் இருவேறு பேருந்துகளில் 23 வயதுப் பெண்மணி ஒருவரும் 16 வயது இளைஞர் ஒருவரும் கத்திக்குத்துக்கு இலக்காகினர்.

இவ்வாறான தாக்குதல் நடத்துபவர்கள் முன்பின் தெரியாதவர்கள். சற்றும் எதிர்பாராதவிதமாக இவை நடத்தப்படுகின்றன. வீதிகளில் செல்லும்போதும் பேருந்துகளில் பயணிக்கும்போதும் முன்னாலும் பின்னாலும் காணப்படு - பவர்களை விழிப்பாகக் கண்காணிக்குமாறு பாதுகாப்புத்துறையினர் ஆலோசனை வழங்குமளவுக்கு நிலைமை மோசமாகி வருகிறது.

இவ்வாறான தாக்குதல்களை நடத்துபவர்களில் பெரும்பாலானோர் இளையோர் என்பது அதிர்ச்சி தரும் தகவல். ஆண்கள் பெண்கள் என்ற வித்தியாசமின்றி திடுதிப்பென தாக்குதல்களை நடத்துகின்றனர்.

ரொறன்ரோவிலுள்ள பல்கலைக்கழகமொன்றுக்கு அருகாமையில் வீடில் - லாத ஒருவர் வீதியில் படுத்திருக்கையில் அவரது கைத்தொலைபேசியைப் பறிப்பதற்காக நடத்தப்பட்ட தாக்குதலில் அவர் மரணித்தார். எட்டு யுவதிகள் கைதாகி நீதிமன்றின் முன்னால் நிறுத்தப்பட்டுள்ளனர்.

இவ்வாறான குற்றச் சம்பவங்கள் ரொறன்ரோ நகரில் இடம்பெறுவதைக் குறிப்பிட்ட ஆங்கிலப் பத்திரிகையொன்று, 'It's a real life nightmare. It's out of control" ( இது அச்சமூட்டும் நிஜமான கொடுங்கனவு. இது அத்துமீறியுள்ளது ) என்று குறிப்பிட்டுள்ளது.

ரொறன்ரோவின் ரயில் நிலையங்களின் உட்பகுதிகள் வீடற்றவர்களின் துயிலிடமாக மாறியுள்ளன. இங்கு போதைவஸ்துகள் பாவனையும் விநியோகமும் தாராளமாக இடம்பெறுகிறது.

இவை எல்லாவற்றுக்கும் காரணம் கொரோனா பேரிடரென்றும், இதனால் பலர் மனநலம் குன்றி தங்களை அறியாமலே குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றனர் என்றும் இலகுவாக சொல்லி தப்பிவிட முடியாது.

நகர நிர்வாகம், காவற்துறை, குடிசார் அமைப்புகள் அனைத்தும் இணைந்து இவற்றுக்கு முற்றுப்புள்ளி வைக்க முன்வர வேண்டும். தவறினால், ரொறன்ரோ நகரம் எம் கண்முன்னால் நரகப் பிரதேசமாகி விடலாம்!

**திரு எஸ். திருச்செல்வம்**

ISSN 1206-0585

**Established**
February 1991

P.O. Box-3, Station F
Toronto, ON M4Y-2L4,
Canada

Tel: 416 920 9250

**E-mail**
tamilsinfo@sympatico.ca

**Produced by**
Eelam Thamil Information Centre (ETHIC) of Toronto & Thamil Information Research Unit (THIRU)

**Published by**
Ahilan Associates

**Editor in chief**
Thiru S. Thiruchelvam

**Associate Editor**
Ranji Thiru

**Assistant Editor and Production Manager**
Sasi Pathmanathan

**Assistant Editors**
Quintus Thuraisingam
Anojini Kumaradasan

**General Manager**
R. R. Rajkumar

**Public Relation**
N. Vimalanathan
N. Kumaradasan
R. Sivalingam
V. Vivekananthan
P. Sivasubramaniam

**Technical Support**
Haran Graph

**Monthly**
5000 Copies

**Annual**
6000 Copies

**Website**
www.tamilsinformation.info

# கனடாவின் இரும்புப் பெண்! மிஸிஸாகா மாதா!



தூங்கிக் கொண்டிருந்த சிறு கிராம - மான மிஸிஸாகாவை பெருவிருட்சமாக வளர்த்தெடுத்த பெருமைக்குரிய - 36 வருடங்கள் தொடர்ச்சியாக இந்த நகரை அரசாட்சி புரிந்து கனடாவின் இரும்புப் பெண்ணாக மதிக்கப்பெற்ற ‘மிஸிஸாகா மாதா’ ஹேசல் - மக்கிலியோன் (Hazel - McCallion) அம்மையார் தமது 101வது வயதில் கடந்த மாதம் (ஜனவரி) 29ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அதிகாலை வேளை-யில் இயற்கையானார்.

கனடிய வரலாற்றியலில் தனித்துவ மரியாதைக்குரியவராக பதிவு பெற்று - ள்ள அம்மையார் காதலர் தினமான பெப்ரவரி 14ம் திகதி பிறந்தவர். இந்த வருடம் பிறந்த சில நாட்களுள் இவர் கணைய புற்றுநோயால் (Pancreatic Cancer) பாதிக்கப்பட்டிருப்பது தெரிந்த வேளையில், வாழ்வின் இறுதிக்கட்டத் - துள் தாம் இருப்பதை உணர்ந்து கொண்டார். பெப்ரவரி 14 வரையும் வாழ்ந்தால் 102வது பிறந்தநாளை தான் கொண்டாடுவேன் என்று குடும்ப உறவு-களிடம் அப்போது தெரிவித்திருந்தார்.

மிஸிஸாகாவை ஹேசல் அம்மையாரின் சிந்தனையின் சின்னம் என்று அனை - வரும் அழைப்பர். இவரது ஆற்றலை சூறாவளிக்கு நிகரானதென்று கூறுவர். இதனால் இவர் பற்றிய நூல் Hurricane Hazel என்ற மகுடத்தில் வெளியானது. 1978 முதல் 2014 வரை 12 தடவைகள் மிஸிஸாகாவின் நகரமாதாவாக (Mayor) பதவி வகித்து 93வது வயதில் ஓய்வு பெற்றாராயினும், பொதுப்பணிக்கு இறுதிவரை விடைகொடுக்காது வாழ்ந்து வந்த அருஞ்சாதனையாளர் அம்மையார்.

# கனடா எதிர்கொள்ளும் சவால்கள்: குடிவரவு இலக்கு, மருத்துவ சேவை எகிறிப்போகும் பணவீக்கம் !

கொரோனா பேரிடர் காலத்தில் உருவான பொதுச்சேவை செயற்பாட்டு பின்னடைவுகளால் கனடா முன்னெப்போதும் இல்லாத பல நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க நேர்ந்துள்ளது. வளர்ச்சியடைந்த நாடுகளில் கனடாவே அதிகூடிய சவால்களை சந்திப்பதாக தெரிவிக்கப்-படுகிறது.

எகிறிப் போகின்ற பணவீக்கம், விலைவாசி உயர்வு, வாழ்க்கைச் செலவை சமாளிக்க முடியாத பொதுமக்களின் திண்டாட்டம், இதனால் களவு, வழிப்பறி, கொள்ளை, மனநலம் குன்றியவர்களின் வன்செயல்கள் என்பவற்றுக்கு தீர்வு காண முடியாது கனடிய மத்திய - மாகாண - மாநகர அரசுகள் திண்டாடுகின்றன.

இவற்றுக்கு அப்பால், திட்டமிடப்படும் குடிவரவு இலக்கை நிறைவு செய்வதில் மத்திய அரசு பின்னடைவை சந்தித்து வருகிறது. பெரும்பாலான குடிவரவு, பிரஜாவுரிமை, கடவுச்-சீட்டு திணைக்களங்களின் பணியாளர்கள் அலுவலகம் செல்ல விரும்பாது தொடர்ந்து வீடுகளில் வசித்தவாறே கடமைகளைப் புரிவது இதற்கான முக்கிய காரணங்களில் ஒன்றென அடையாளம் காணப்பட்டுள்ளது.

கனடாவுக்குள் ஏற்கனவே வசிப்பவர்கள் நிரந்தரக் குடியுரிமை அட்டையைப் பெறுவதற்கும் பிரஜாவுரிமையை பெறுவதற்கும் விண்ணப்பித்துவிட்டு, மாதக்கணக்கில் - சில வருடங்கள் தாண்டியும் அவைகளைப் பெறமுடியாதுள்ளனர். இதே நிலைமையே கனடிய கடவுச்சீட்டு பெறுவதிலும் ஏற்பட்டுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர்களின் அலுவலகங்களால்கூட தங்கள் தொகுதி மக்களுக்கு உடனடியாக உதவ முடியாத நிலையில், சம்பந்தப்பட்ட அரச திணைக்களங்களில் விண்ணப்பங்கள் தேக்க நிலையில் உள்ளன.

குடும்ப மீளிணைவைப் பொறுத்தளவில் சிலருக்கு காத்திருக்கும் காலம் மூன்றாண்டு - களையும் தாண்டியுள்ளது. சட்டபூர்வமாக திருமணம் புரிந்த நூற்றுக்கணக்கான வாழ்க்கைத்துணைகள் மருத்துவ சோதனை, பொலிஸ் சோதனை ஆவணங்களை நிறைவு செய்தும் அவர்களுக்கு கனடா வருவதற்கு வெளிநாடுகளிலுள்ள கனடிய தூதரகங்கள் விசா வழங்குவதில் தாமதம் காணப்படுகிறது.

கொரோனா பேரிடரின் பின்னர் பெருமளவில் பாதிக்கப்பட்ட இன்னொன்றாக மருத்துவ - சுகாதார சேவை காணப்படுகிறது. கனடிய மைய ஊடகங்கள், பத்திரிகைகள், வானொலி மற்றும் தொலைக்காட்சிச் சேவைகளில் இது தொடர்பாக பாதிக்கப்படும் மக்களின் கருத்துகள் தினமும் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

மருந்துத் தட்டுப்பாடு, அவசர சிகிச்சைப் பிரிவில் காணப்படும் நீண்ட தாமதம், மருத்துவ பணியாளர்களின் தட்டுப்பாடு, சத்திர சிகிச்சைப் பிரிவுகள் பின்போடப்படுவது என்பது தினசரி நிகழ்வாகிவிட்டது. எக்ஸ்ரே, எம்ஆர்ஐ போன்ற மருத்துவ பரிசோதனைகளுக்கு வெளிநோயாளர்கள் மட்டுமன்றி மருத்துவமனைகளின் உள்ளக நோயாளர்கள்கூட காத்திருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

மக்கள் தொகை அதிகமாகவுள்ள ஒன்ராறியோ, கியுபெக் மாகாணங்களில் மருத்துவ சேவை என்பது பெரும் கேள்விக்குறியாக மாறியுள்ளது. வெளிநாடுகளிலிருந்து துறைசார் பயிற்சி பெற்றவர்களை துரிதமாக வரவழைக்கும் திட்டம்கூட முறையாகவும் முழுமையா - கவும் செயற்படுத்தப்படவில்லை.

அதேசமயம், ஏற்கனவே தற்காலிகமாக கனடாவில் வசித்துவரும் வெளிநாட்டவர்களுக்கு, குறிப்பாக மருத்துவ துறைகளில் பயிற்சி பெற்றவர்களுக்கு தொழில் அனுமதி (work permit) வழங்கி அவர்களது சேவையை உள்வாங்க குடிவரவுத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளதாக அறிவித்துள்ளபோதிலும், அதுவும் முழுமையாக செயல்வடிவம் பெறவில்லை.

ஒன்ராறியோ மாகாண அரசு இவ்வாறான நெருக்கடிகளைத் தீர்ப்பதற் - காக இரண்டு திட்டங்களை அறிமுகம் செய்துள்ளது.

(விபரமான கட்டுரை 7ம் பக்கத்திலுள்ளது)



எஸ்தி



றஞ்சி திரு

# சின்னச் சின்ன தகவல்கள்

மனித உடல்களை உரமாக்கும் செயற்திட்டத்துக்கு நியுயோர்க் மாகாண அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. ஒருவரின் இறப்பின் பின்னர் சடலத்தைத் தகனம் செய்த பிறகு அல்லது அடக்கம் செய்த பிறகு அதனை நுண்ணுயிரியின் செயற்பாட்டில் உரமாக மாற்றும் திட்டம் இது. இவ்வாறு உரமாக்குவதன் மூலம் ஒரு தொன் காபனை சேமிக்க முடியுமென்றும், இதன் காபனீர் ஒக்சைட்டின் உமிழ்வுகள் காலநிலை மாற்றத்துக்கு முக்கியமெனவும் கூறப்படுகிறது. அமெரிக்காவில் நியுயோர்க் மாகாணத்திலேயே முதன்முறையாக இந்தத் திட்டம் பரீட்சார்த்தமாக நடைமுறைக்கு வருகிறது.

உகண்டாவிலுள்ள கபரோறோ என்ற இடத்திலுள்ள கடற்கரையில் விளையாடிக் கொண்டிருந்த இரண்டு வயதுச் சிறுவன் இகா போல் என்பவனை, கடல்யானை ஒன்று கவ்வியவாறு கடலுக்குள் இழுத்துச் சென்றது. சிறுவனின் அரைவாசி உடல் அதன் உட்பகுதிக்குள் சென்ற நிலையில், இதனைக் கண்ட ஒருவர் கற்களை எடுத்து கடல்யானை மீது வீசி அதனை அச்சமூட்டினார். எதிர்பாராத தாக்குதலால் திணறிய கடல்யானை அந்தச் சிறுவனை வெளியே கக்கிவிட்டு கடலுக்குள் தப்பியோடியது. சிறு காயங்களுடன் தப்பிய சிறுவன் அவசர சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

தென்சூடானின் ஜனாபதி சால்வா கீர் அந்த நாட்டின் விழா ஒன்றில் தேசிய கீதம் இசைக்கும்போது, அவரை அறியாது அவர் சிறுநீர் கழித்து, காற்சட்டையை நனைத்துவிட்டார். இதனை வீடியோவில் பதித்து சமூக ஊடகங்கள் பகிர்ந்ததுடன் நிற்காமல் தொலைக்காட்சியில் ஒளிபரப்பியும் தெரியப்படுத்தி விட்டன. இதற்காக ஆறு ஊடகவியலாளர்களை அந்நாட்டு பொலிசார் கைது செய்தனர். இங்குள்ள ஊடகவியலாளர்களுக்கு ஒளிபரப்புவதற்கு வேறு படங்கள் கிடைக்கவில்லையா என சூடான் அரசு ஊடகங்களிடம் கேட்டுள்ளது.

பல கோடி ரூபா சொத்துகளுக்குச் சொந்தமான ஒன்பது வயது சிறுமி ஒருவர் அந்தச் சொத்துகள் எதுவும் வேண்டாமென்று கூறிவிட்டு துறவியாகியுள்ளார். இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் கடந்த மாதம் இது இடம்பெற்றுள்ளது. பிரபல வைர வியாபாரியான சங்வி என்பவரின் மகளான தேவான்ரி என்பவரே இவ்வாறு துறவியானவர். அதற்கு முன்னர் அறுநூறு கிலோமீற்றர் தூரம் நடந்து சென்று துறவு வாழ்வுக்கு தன்னை தயார் பண்ணி, பெற்றோர் மற்றும் பல நூறு பேர் முன்னிலையில் அதற்கான சிறப்புத் தீட்சை பெற்று துறவு வாழ்க்கையை இவர் ஆரம்பித்துள்ளார்.

கடந்த மாதம் 17ம் திகதி பிரான்சில் காலமான லூசில்ராண்டன் என்ற 118 வயதுப் பெண்மணியே உலகில் மிக வயதானவராக இருந்ததாக கின்னஸ் சாதனையைப் பெற்றுள்ளார். இவருடைய பிள்ளைகள், பேரர்கள், பூட்டப்பிள்ளைகளின் மொத்த எண்ணிக்கை 85க்கும் அதிகம். இவரையடுத்து 1907ம் ஆண்டு மார்ச் மாதம் 4ம் திகதி அமெரிக்காவில் பிறந்த பிரான்யாஸ் மொரோ என்பவர் அதிகூடிய வயதுச் சாதனையைப் பெற்றுள்ளார். ஒருபோதும் மருத்துவமனைக்குச் சென்றிராத இவர் தற்போது ஸ்பெயினில் வாழ்ந்து வருகிறார். இவருக்கு 3 பிள்ளைகள், 11 பேரப்பிள்ளைகள், 11 கொள்ளுப் பேரர்கள் என கூட்டுக்குடும்பம் உள்ளது.

# ஒன்ராறியோவில் கடந்த ஆண்டு 400க்கு மேற்பட்டோர் விபத்துகளில் பலி!

கடந்த ஆண்டு ஒன்ராறியோவில் வாகனம் மற்றும் படகுச் சவாரி சம்பவங்களில் ஒவ்வொரு நாளும் குறைந்தது ஒருவர் இறந்துள்ளார். இந்த எண்ணிக்கை 400க்கும் மேலானது என்று ஒன்ராறியோ காவற்துறை (OPP) தெரிவித்துள்ளது.

“நாம் 2022ஐ திரும்பிப் பார்க்கும்போது, அது ஆபத்தான ஆண்டு” என்று ஒன்ராறியோ காவற்துறை சார்ஜண்ட் கெரி ஸ்மித் கூறினார். மாகாணம் முழுவதும் மோட்டார் சைக்கிள் மோதல்கள், கடல் விபத்துகள் மற்றும் பனிமொபைல் இடிபாடுகளில் குறைந்தது 423 பேர் உயிர் இழந்தனர். 2022ம் ஆண்டில் 353 ஆபத்தான மோட்டார் வாகன மோதல்களுடன் பெரும்பாலான இறப்புகள் வீதிகளில் இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதிவேக மற்றும் ஆக்ரோசமாக வாகனம் ஓட்டுவது விபத்துகளுக்கு மிக மோசமான காரணமாக பட்டியலில் முதலிடத்தில் உள்ளது.

கவனக்குறைவான மற்றும் கவனம் திசைதிரும்பியவாறு வாகனம் ஓட்டுவதால் 2022ம் ஆண்டில் 66 பேர் இறந்தனர். இது விபத்துகளுக்கு இரண்டாவது மிக உயர்ந்த காரணமாகும். மதுபானம் அல்லது போதைப்பொருளின் செல்வாக்கில் வாகனம் ஓட்டுவதால் ஏற்பட்ட விபத்துகளால் மாகாணத்தில் 53 பேர் இறந்ததாகவும் 44 மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்கள் கொல்லப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு ஒன்ராறியோவில் மோட்டார் வாகன மோதல்களில் குறைந்தது 29 பாதசாரிகள், 12 சைக்கிள் ஓட்டுநர்களும் உயிரிழந்தனர்.

2022ம் ஆண்டில் படகுச் சவாரி மற்றும் கடல் விபத்துகளில் 29 பேர் உயிரிழந்தனர். வீதிகளல்லாத இடங்களில் நிகழ்ந்த வாகன விபத்துகளில் 27 பேர் இறந்தனர். குளிர்காலத்தில் பனிமொபைல் மோதல்களில் 14பேர் இறந்தனர். நவம்பர் மாத நடுப்பகுதியில் ‘பண்டிகை சவாரி’ கவனப் பிரசாரத்தைத் தொடங்கியதிலிருந்து குறைந்தது 1241 ஓட்டுநர்களிடம் தண்டக் கட்டணம் வசூலிக்கப்பட்டுள்ளது.

புத்தாண்டு கொண்டாட்ட காலத்தில் 56 ஓட்டுநர்களுக்கு கட்டணம் விதிக்கப்பட்டுள்ளது.

“2023ம் ஆண்டு மிகவும் பாதுகாப்பான ஆண்டாக இருக்க வேண்டும். தயவுசெய்து ஒரு சிறந்த ஓட்டுநராக இருங்கள். நீங்கள் குடித்தால் வாகனம் ஓட்ட வேண்டாம். நீங்கள் வாகனம் ஓட்டினால் குடிக்க வேண்டாம்” என்று ஒன்ராறியோ காவற்துறை அறிவித்துள்ளது.

ஊரும் உலகும் - 13

பேராசிரியர் அமுது ஜோசெப் சந்திரகாந்தன்



# கனடிய கூட்டாட்சியில் சில புதிய கீறல்கள்

கடந்துசென்ற காலத்தை இறந்தகாலம் என நாம் குறிப்பிடுவதுண்டு. ஆனால் அரசியலிலும், அன்றாட வாழ்விலும் கடந்த காலம் வெறுமனே இறந்து விடுவதில்லை. சில வழிகளில் நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் கடந்த காலமே தொடர்ச்சியாக ஆற்றுப்படுத்துகின்றது.

கியுபெக், அல்பேர்ட்டா எனும் இரு கனடிய மாநில அரசுகளில் சென்ற ஆண்டின் இறுதிக் காலில் இயற்றப்பட்ட இரண்டு சட்டங்கள் கனடாவின் தேசியமட்டத்தில் இந்நாட்டின் கூட்டாட்சியின் வலுவான தொடர்ச்சி பற்றி காத்திரமான பல வாதப்பிரதிவாதங்களைத் தோற்றுவித்தன. கனடாவின் தேசிய பத்திரிகைகளும், மாநிலத் தினசரிகளும் இவைபற்றி காட்டமாகவும் கண்டனக் குரலிலும் கருத்துகளை வெளிப்படுத்தியிருந்தன.

வேறு சில ஆய்வாளர்கள் ஆழமான, விரிவான நோக்கில் கனடாவின் கூட்டாட்சி அரசியலமைப்பின் வருங்காலம் பற்றி எதிர்வுகள் கூறி எழுதினார்கள். அவற்றுள் மேரி ஃபெஸ்டர் எழுதிய 'பிரிவினைவாதமும் கூட்டமைப்பும்: அல்பேர்ட்டா மற்றும் கியூபெக்கின் நிலைப்பாடுகள்' (மெக்கில் பல்கலைக் கழக அரசியல் ஆய்விதழ் நவம்பர் 13, 2019) என்ற கட்டுரையும், தன்சிம் ரஷித் எனும் சட்டவியல் ஆய்வாளர் நீதிமன்றம் (The Court) எனும் மின்னிதழில் (நவம்பர் 1, 2022) எழுதிய 'மெதுவாக நகர்ந்து, அமைதியாக ஊர்ந்து கனடாவை நோக்கிவரும் அரசியலமைப்பு நெருக்கடிகள்' எனும் ஆய்வும் நுனிந்து நோக்கத்தக்கவை.

கனடாவின் கூட்டாட்சி அரசியலமைப்பு அதன் ஆரம்பகாலமுதல் அவ்வப்போது சில அதிர்வலைகளுக்கு உள்ளாகி, கடந்த நான்கு தசாப்தங்களுக்கு மேலாக சற்று முனைப்பாக மேற்கிளம்பி வருவதைப் பலரும் அறிவர்.

1987ல் அன்றைய பிரதமர் பிறையன் மல்ரோனி, கனடாவின் மாகாணங்களின் பத்து முதலமைச்சர்களுடனும் கலந்துரையாடி 'மீச் ஏரி ஒப்பந்தம்' வழியாக கியுபெக் மாநிலத்தின் ஒப்புதலைப் பெறும் முயற்சியில் ஈடுபட்டார். அந்த ஒப்பந்தம், கியுபெக் கனடாவில் இருந்து பிரிந்து போகாத வண்ணம், ஒரு வகையில் 'தனித்துவமான சமூகமாக' (distinct society) அதனை அங்கீகரிக்க முயன்றது, ஆயினும் மீச் லேக் ஒப்பந்தம் தோல்வியிலேயே முடிந்தது.

1990ல் புதிய அரசியலமைப்பு திருத்தங்கள் சிலவற்றை முன்மொழிந்து கியுபெக்கை அரசியலமைப்பு வட்டத்தினுள் கொண்டுவர பிரதமர் மல்றோனி முயற்சி செய்தார். இதற்கான பேச்சுவார்த்தைகள் வழியாக எய்திய உடன்பாடு 1992ல் 'சார்லட்டவுன் ஒப்பந்தம்' என அழைக்கப்பட்டது. இதில் மத்திய அரசின் அதிகார வரம்பினுள் பல விட்டுக்கொடுப்புகளுக்கான வாய்க்கால் திறக்கப்பட்டது. வனவியல், சுரங்கம், கலாசார விவகாரங்கள் போன்றவையுடன், மத்திய அரசின் அதிகாரத்திற்குட்பட்டவை எனக் கருதப்பட்ட வேறு சில விடயங்களிலும் அதிகாரப்பகிர்வு அறிமுகப்படுத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து கனடாவில் தேசிய ரீதியிலும் கியூபெக் மாநித்திலும் 1992ல் இந்த உடன்பாடு பற்றி இடம்பெற்ற கருத்துக்கணிப்பு தோல்வியையே தழுவியது.

மூன்றாண்டுகளின் பின்பு, 1995ல் கியுபெக் மாநிலத்தில் இடம்பெற்ற பிரிவினை சார்ந்த கருத்துக்கணிப்பும் தோல்வியில் முடிந்தது. கோவிட்-19 பெருநோயைத் தொடர்ந்து ஏற்பட்ட பொருண்மிய நெருக்கடிகளும் நிதிப்பற்றாக் குறைகளும், கனடிய பூர்வீக பழங்குடிகளுக்கு தொடர்ச்சியாக இழைக்கப்படும் அநீதிகள், மனித உரிமை மீறல்கள், வாழ்வாதார சமத்துவமின்மை போன்ற பலவும் கனடிய கூட்டாட்சியையும் மத்திய அரசின் தீர்மானங்கள் சிலவற்றையும் சிக்கலுக்கு உள்ளாக்கின.

ஜூன் 1, 2022ல் கியுபெக்கின் அதிகாரபூர்வ பிரெஞ்சு மொழியை மதிக்கும் சட்டம் என அழைக்கப்படும் மசோதா - 96 (Bill 96) கியுபெக் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு சட்டமானது. இச்சட்டம் ஏனையவற்றுடன், அரசியலமைப்புச் சட்டம் 1867ன் 90ன்படி, கியுபெக்கர்கள் ஒரு தேசிய இனம் என்றும், பிரெஞ்சு மொழி அந்த மாகாணத்தின் பொதுவான ஒரே மொழி என்றும் அறிவித்தது. இது கனடாவில் பல அதிர்வலைகளைத் தோற்றுவித்தது.

அக்டோபர் 6, 2022ல் டேனியல் ஸ்மித் அல்பேர்ட்டா மாநிலத்தின் புதிய முதல்வ - ரானார். ஐக்கிய கன்சர்வேடிவ் கட்சியின் (UCP) தலைமைப் பிரசா - ரத்தின் போது அவர் முன்வைத்த பல முன்மொழிவுகளில், மாகாண அதிகார வரம்பில் ஊடுருவும் மத்திய அரசின் எந்தவொரு சட்டம் அல்லது ஒழுங்குமுறைகளையும் புறக்கணிக்கும் அதிகாரத்தை அல்பேர்ட்டாவின் இறையாண்மைச் சட்டம் மாநில அரசுக்கு வழங்கும் என்று வாதிட்டார்.

அல்பேர்ட்டா மற்றும் கியுபெக்கில் கனடிய அரசியலமைப்பு சார்ந்த முழுமையான நெருக்கடியாக மலரக்கூடிய சாத்தியம் உண்டு. அரசியலமைப்பு ரீதியாக நிர்ணயிக்கப்பட்ட அதிகாரப் பகிர்வின் கீழ் ஒரு மாகாண அரசாங்கம் தெரிந்து கொண்டே தனது கடமைகளில் மீறியதற்கு கனடாவின் வரலாற்றில் எந்த முன்னுதாரணமும் இல்லை. 'அல்பேர்ட்டா மாகாணம் கூட்டாட்சி சட்டத்தை அமல்படுத்த மறுத்தாலும் சரி அல்லது கியூபெக் மாகாணம் மத்திய அரசின் ஆலோசனையின்றி அரசியலமைப்பை திருத்தினாலும் சரி, இரு அரசாங்கங்களும் தேசத்துரோக செயல்களில் ஈடுபடத் தயார் என்பதையே இது தெளிவுபடுத்துகின்றது என தன்சிம் ரஷித் குறிப்பிடுகிறார்.

"ஒரு மாகாணம் கூட்டாட்சி சட்டத்தை அமுல்படுத்த மறுக்கும் சூழ்நிலையில் மத்திய அரசு உள்ளீடு செய்ய சட்ட வழிமுறை எதுவும் இல்லை, விதிவிலக்காக, இந்த விடயத்தில் நீதித்துறையின் மத்தியஸ்தத்துடன் அதிகார வரம்புகளை துல்லியமாக மத்திய அரசு மீளமைக்கலாம்" என் தன்சிம் ரஷித் தமது கட்டுரையில் தெரிவித்துள்ளார்.

இதன் ஒளியில் சென்ற ஆண்டு ஒட்டாவா நகரை ஸ்தம்பிக்கச் செய்த 'விடுதலை வாகனத்தொடர்' போராட்டத்தையும் இணைத்துப் பார்த்தல் தகும். அந்தப் போராட்டம் கனடிய மத்திய அரசு விதித்த 'தடுப்பூசி ஆணைகளுக்கு' எதிராகவும், பல இடையூறுகளை விளைவிக்கும் நோக்குடனுமே முன்னெடுக்கப்பட்டது.

வாரக்கணக்கில் நீடித்த இந்த எதிர்ப்புகள், அவசரகாலச் சட்டத்தை செயல்படுத்தத் தூண்டியது. எதிர்ப்பாளர்களில் பெரும்பாலானவர்கள் அல்பேர்ட்டா மற்றும் கியுபெக்கிலிருந்து ஒட்டாவாவிற்கு பயணித்தவர்கள் என்பதும் உற்றுநோக்கத்தக்கது.

எல்லை கடந்த உலா

பிறேம் சிவகுரு - இங்கிலாந்து



# போர்த்தாங்கிகளுடன் ஜேர்மனி போராடுகிறது !

பங்காளியையும் பனங்காயையும் பதம் பார்த்துக் கொள்ள வேண்டும் என்பர் முன்னோர். ஜேர்மனியரில் பலருக்கு பனங்காய் குறித்த பரிச்சயம் இல்லாவிட்டாலும் புதிய உக்ரைனிய பங்காளிக்கு தமது நவீன சிறுத்தை என்ற அர்த்தப்படுத்தலுக்குரிய லெப்பாட்-2 (Leopard 2) போர்த்தாங்கிகளை அனுப்பும் விடயத்தில் பதம் பார்த்து - கொள்வது போலத்தெரிகிறது.

உக்ரைன் மீதான ரஸ்ய ஆக்கிரமிப்புப் போரின் முதலாம் ஆண்டு நிறைவுக்கு (24 பெப்ரவரி) இன்னமும் 3 வாரகாலம் கூட இல்லை. ஆயினும் இந்த ஒரு வருடப் போர்க்காலத்தின் மேற்கு - லக கூட்டணியை சற்று பிளவுபடுத்தியிருப்பதை ஜேர்மனியின் விடாப்பிடி போர்த்தாங்கி ராஜதந்திரம் ஓரளவுக்கு நிரூபித்துள்ளது.

கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் உக்ரைனுக்கு புதிய இராணுவ உதவிகளை வழங்குவது குறித்து ஜேர்மனியில் 50க்கும் மேற்பட்ட நாடுகளின் பிரதிநிதிகள் ஒன்றுகூடி பேசினாலும், லெப்பாட்-2 தாங்கிகளை உக்ரைனுக்கு அனுப்பும் விடயத்தில் மட்டும் ஜேர்மனியின் மனதை மாற்றிக் கொள்ள முடியவே இல்லை. ஜேர்மனியின் இந்த முரண்டுபிடிப்பு தமது நம்பிக்கை - யில் அமிலத்தை ஊற்றுவதாக நேட்டோ விசனப்பட்டாலும், ஜேர்மனியின் இந்த தயக்கத்தில் காரணங்கள் உள்ளன.

ஜேர்மனியைப் பொறுத்தவரை அதுதான் உலகம் சந்தித்த இரண்டு உலகப் போர்களின் ஊற்றுக்கண்ணாக இருந்திருக்கிறது. இந்தக் கொடிய உலகப் போர்களின் முகத்தை மறைத்து சாந்த முகத்தை உலகுக்குகாட்ட அதற்குப் பல தசாப்பதங்கள் சென்றது.

இந்தக் கசப்பான பின்னணியில் ரஸ்யாவிற்கு எதிராக தனது போர்த் - தாங்கிகளை களமிறக்குவது, ரஸ்யாவுடனான ஒரு நேரடி மோதலை தூண்டிவிடுமோ என்ற அச்சம் அதற்கு உள்ளது. இதனால்தான் தாங்கிகளை வழங்கும் விடயத்தில் அமெரிக்கா கடும் அழுத்தங் - களை வழங்கினாலும், இதுவரை அது அசைந்து கொடுக்கவில்லை.

இதற்கும் அப்பால் இன்னொரு காரணமும் உள்ளது. ஜேர்மனி என்னதான் ஐரோப்பாவின் செல்வந்த நாடாக இருந்தாலும் அடுத்துவரும் சில ஆண்டுகளில் ஜேர்மனி எடுக்கும் முடிவுகள், முழு ஐரோப்பிய கண்டத்தின் பாதுகாப்பை வரையறுக்கும் ஒரு முக்கிய பங்கை வகிக்கக்கூடும். என்றாலும் அது தனது இராணு- வத்தை வலுப்படுத்தும் முயற்சியில் சவால்களை சந்திக்கத்தான் செய்கிறது.

உக்ரைன் மீதான ரஸ்யப் படையெடுப்புக்கு முன்னரான ஜேர்மனியின் வெற்றியின் இரகசியத்தை உருப்பெருக்கி நோக்கினால், மலிவான சீன உழைப்பால் கிட்டிய ஆதாயம் மலிவான ரஸ்ய ஆற்றல் மற்றும் அமெரிக்காவின் பாதுகாப்பு உத்தரவாதங்களின் மீதே அந்த வெற்றி இரகசியம் இருந்தது.

ஆனால், உக்ரைன் மீதான ரஸ்ய படையெடுப்பு அதன் பாதுகாப்புக்கான அணுகுமுறையை சடுதியாக மறுபரிசீலனை செய்யவைத்து தனது இராணுவத் திறனை நவீனப்படுத்த 100 பில்லியன் யூரோக்களை செலவிடும் உறுதியை கடந்தவருடம் எடுத்து உலகையே உற்றுநோக்க வைத்திருந்தது.

நிதி ஒதுக்கீடு அறிவிக்கப்பட்டது சரி. ஆனால் அதற்காக மிக வேகமாக நகர்வது அதற்கு கடினமாகியுள்ள நிலையில் உக்ரை - னுக்கு தாங்கிகளை அனுப்பும் விடயத்தில் ஒருதலைப்பட்சமாக நகர்வதைவிட தனது மேற்குலகப் பங்காளிகளுடன் நகரும் அணுகுமுறையையே தந்ரோபாயமாக கொள்ள விரும்புகிறது.

உண்மையில் உக்ரைனுக்கு ஜேர்மனி இராணுவ உதவிகளை வழங்காமல் இல்லை. கவசவாகனங்கள் மற்றும் பேட்ரியாட் ஏவுகணை பாதுகாப்பு அமைப்புகள் உட்பட கனரக உபகரணங்களை அது ஏற்கனவே வழங்கியிருக்கிறது.

ஆயினும், போர்த்தாங்கிகளை வழங்குவதில் மட்டும் பின்னடிப்பது அதன் நட்பு நாடுகளுடனும் உரசலை ஏற்படுத்தி உக்ரைனுக்கு உதவுவதில் ஜேர்மனிதான் மிகக்குறைந்த செயல்திறன் கொண்ட நாடு போலந்து சாடும் அளவுக்கு நிலைமையை உருவாக்கியுள்ளது. இவ்வாறு சாடிய போலந்து, தன்னிடம் உள்ள லெப்பாட் - 2 போர்த் - தாங்கிகளை உக்ரைனுக்கு அனுப்பப்போதாகவும் எச்சரித்துள்ளது.

போலந்திடம் அதற்குச் சொந்தமான லெப்பாட்-2 தாங்கிகள் இருந்தால் அதனை அனுப்ப வேண்டியதுதானே. அதற்கு என்ன எச்சரிக்கை வேண்டிக்கிடக்கிறது என நீங்கள் நினைக்கக்கூடும். ஆனால், இதில் சிக்கல் உண்டு. ஏனெனில் ஜேர்மன் தயாரிப்பு தாங்கிகளை கொண்டிருக்கும் நாடுகள் அவற்றை வேறொரு நாட்டுக்கு ஏற்றுமதி செய்யவேண்டுமானால் அதற்கு ஜேர்மனி அனுமதிக்க வேண்டும். அவ்வாறான ஒரு ஏற்றுமதி உரிம உடன்பாடு உண்டு.

ஆனால், இப்போது போலந்தோ ஜேர்மனியைப் புறக்கணித்து அதனிடமுள்ள லெப்பாட்-2 தாங்கிகள் உக்ரைனுக்கு வழங்கப்போவதாக கூறுகிறது. அது அவ்வாறு செய்தால் ஜேர்மனிக்கும் அதற்கும் இடையிலான உறவு உரசப்படும்.

சரி இப்போது ஏன் உக்ரைன் கவுண்டமணி பாணியில் பெற்றோமாக்ஸ் விளக்கேதான் வேண்டும் என்ற வகையில் லெப்பாட்-2 தாங்கிகளை கோருகின்றது என்ற வினாவை நோக்கினால், அதற்குக்காரணம் எதிர்வரும் மாதங்களில் ரஸ்யா தீவிரப்படுத்தக்கூடிய போர் அச்சமாகும்.

ரஸ்யாவின் இந்தப் புதிய படையெடுப்பை எதிர்கொள்ள தன்னிடம் கனமான கவசம் இல்லாவிட்டால் அது பெரும் சிக்கலாக மாறும் என உக்ரைன் உணர்கிறது. இப்போது அதனிடம் குறைந்த அளவில்தான் போர்த்தாங்கிகள் உள்ளன. அவையும் பழைய சோவியத் காலத்தைச் சேர்ந்தவை என்பது வேறுவிடயம். இதனால்தான் தனக்கு 300 புதிய தாங்கிகள் தேவையென உக்ரைன் அலறுகிறது. 300 வேண்டாம் 100 தாங்கிகளை வழங்கினாலே போரின் சமநிலை மாறும் என எதிர்பார் - க்கப்படுகிறது. இதனால் அது ஜேர்மனியின் சிறுத்தைகளைக் கோருகின்றது.

1979ல் முதன்முதலில் சேவைக்கு வந்த லெப்பாட் - 2, ஐரோப்பாவில் உள்ள 13 நாடுகளிடம் மொத்தமாக 2,000 அலகுகள் உள்ளன. கனடிய ராணுவத்திடமும் இதே ரக தாங்கிகள் 82 உள்ளன.

**பிந்திய தகவல்:** அமெரிக்காவும் ஜேர்மனியும் உக்ரைனுக்கு போர்த்தாங்கிகளை வழங்க முடிவெடுத்துள்ளன. அமெரிக்கா தனது எம் - 1 ஆப்ராம்ஸ் ரக தாங்கிகளில் 30 வாகனங்களையும், ஜேர்மனி லெப்பார்ட் - 2 ரக தாங்கிகள் 14ஐயும் அனுப்பவுள்ளன. இதனால் இனி உக்ரைனிய போர்க்களம் தீவிர ஆட்டத்துக்குள் மாறும் அறிகுறிகள் உறுதிப்படுத்தப்படுகின்றது.

# ஒன்ராறியோ அரசு அறிவிப்பு:

# வெளிமாகாண டாக்டர்கள் ஒன்ராறியோவில் பணிபுரியலாம்! தனியார் சிகிச்சை நிலையங்களில் இலவச சத்திர சிகிச்சை!

ஒன்ராறியோ மாகாணத்துக்கு வெளியே, மற்றைய மாகாணங்களில் பணியாற்றும் டாக்டர்கள், செவிலியர்கள் (தாதியர்) உட்பட்ட சுகாதார பராமரிப்பு பணியாளர்கள் ஒன்ராறியோவில் எந்தவிதமான ஒழுங்குமுறைச் சான்றிதழும் பெறாது உடனடியாக பணியாற்ற அனுமதிக்க ஒன்ராறியோ அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்கான சட்ட முறைமை இந்த மாதத்தில் நிறைவேற்றப்படுமென்று மாகாண முதலமைச்சர் டக் ஃபோர்ட் அறிவித்துள்ளார்.

உதாரணத்துக்கு, பிரிட்டிஷ் கொலம்பியாவிலிருந்தோ அல்லது கியுபெக்கிலிருந்தோ மருத்துவத்துறை சார்ந்தவர்கள் ஒன்ராறியோவில் வந்து பணியாற்ற விரும்பினால் அதிகாரத்துவ தாமதம் தடையாக இருக்கக்கூடாதென்று முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

“கனடா முழுவதிலுமுள்ள மருத்துவப் பணியாளர்கள் ஒன்ராறியோவை தங்கள் புதிய வீடாக மாற்றுவது குறித்து எண்ணியிருந்தால், அதனை நடைமுறைப்படுத்த வேண்டிய நேரம் வந்துவிட்டது. நாங்கள் இங்கே திறந்த கரங்களுடன் இவர்களுக்காக காத்திருக்கிறோம்” என்று முதலமைச்சர் டக் ஃபோர்ட் மேலும் தெரிவித்துள்ளார்.

ஒன்ராறியோவிலுள்ள அரசாங்க மருத்துவமனைகளில் சிகிச்சை பெற நோயாளர்கள் காத்திருக்கும் நேரம் அதிகமாக இருப்பதை தவிர்க்கும் வகையில், மாகாணத்திலுள்ள தனியார் மருத்துவ நிலையங்களில் (கிளினிக்குகள்) சத்திரசிகிச்சை உட்பட அவசர சிகிச்சைகளை வழங்கவும் மாகாண அரசு ஏற்பாடு செய்துள்ளது.

நோயாளர்கள் கட்டணம் எதுவும் செலுத்தாது ஓகிப் அட்டையுடன் இந்தச் சிகிச்சைகளை பெற முடியும். கோவிட் தொற்றுநோய் பேரிடர் காலத்துக்கு முன்னைய காலத்தில் சிகிச்சைகளைப் பெற்றது போன்று சகலருக்கும் சிகிச்சைகளை வழங்கவும், அரசாங்க மருத்துவமனைகளில் ஏற்பட்டுள்ள இடைநெருக்கடிகளைத் தீர்க்கவும் தனியார் சிகிச்சை நிலையங்களைப் பயன்படுத்தும் இந்த நடவடிக்கையை ஒன்ராறியோ மாகாண அரசு எடுத்துள்ளது. இது தொடர்பாக மாகாண அரசு விடுத்துள்ள அறிக்கையின் முக்கிய பகுதி பின்வருமாறு:

“ஒன்ராறியோ ஓஹிவ் அட்டை மூலம் நோயாளிக்கு எவ்வித கட்டணமுமின்றி சேவைகள் தொடர்ந்து நடத்தப்படும்.

டாக்டர்கள் மற்றும் செவிலியர்கள் மருத்துவமனைகளில் இருந்து வெளியேறுவதைத் தடுத்து அவர்கள் ‘ஓய்வு நேரத்தில்’ சுயாதீனமான கிளினிக்குகளில் அதிக சத்திர சிகிச்சைகள் செய்வதற்கான திட்டத்தை இது ஏற்படுத்தும்.

மேலும், சுயாதீனமான சுகாதார வசதிகளில் தனியாருக்கு வழங்கப்படும் சத்திர சிகிச்சைகளின் பல வகையான சர்ச்சைக்குரிய விரிவாக்கம், மருத்துவமனைகளில் சத்திர சிகிச்சை அறை நேரத்தைப் பெற முடியாத கூடுதல் நடைமுறைகளைச் செய்ய மருத்துவர்களை ஊக்குவிக்கும். காத்திருப்பு நேரத்தை உடனடியாகக் குறைப்பதற்கான முதற்படியாக, அரசாங்கம் தற்போதுள்ள சமூக கிளினிக்குகளில் சத்திர சிகிச்சைகள் மற்றும் நடைமுறைகளை விரிவுபடுத்துகிறது, அவர்களது தற்போதைய பணியாளர்களைப் பயன்படுத்துவதால் பரந்த அமைப்பில் எந்தத் தாக்கமும் ஏற்படாது என்பதை உறுதிசெய்கிறது.

ஒன்ராறியோ மக்களுக்கான காத்திருப்பு நேரத்தை மேலும் குறைக்க சமூக அடிப்படையிலான கிளினிக்குகளின் பங்கை அரசாங்கம் விரிவுபடுத்துவதால், மருத்துவமனைகளில் பணியாளர்கள், மற்றும் ஸ்திரத்தன்மையைப் பாதுகாப்பதாக குறிப்பிட்ட நடவடிக்கைகள் இருக்கும். ஏனைய மாகாணங்கள் இதனைச் செய்கின்றன, ஒன்ராறியோவும் இதனையே தற்பொழுது செய்யத் தொடங்கியுள்ளது.

மாகாணத்தில் உள்ள மருத்துவர்களுக்கான ஒழுங்கமைப்பு, இந்தப் புதிய ஏற்பாடு பற்றி கருத்து வெளியிடுகையில், அவசர மருத்துவமனை பராமரிப்புக்கான காத்திருப்பு நேரங்கள் இந்தத் திட்டத்தின் கீழ் அதிகரிக்கும் என்று எச்சரித்துள்ளது.

சமூக சத்திர சிகிச்சை மற்றும் நோயைக் கண்டறியும் இமேஜிங் மையங்களின் மூன்று படிமுறை விரிவாக்கம் பெறும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது

அறுவை சிகிச்சை பின்னடைவுகளை நீக்கி காத்திருப்பு நேரத்தை குறைக்கவும், காத்திருப்பு நேரத்தை உடனடியாக குறைப்பதற்கான முதல் படியாக, அரசாங்கம் சத்திர சிகிச்சைகளை விரிவுபடுத்துகிறது.

தற்போதுள்ள சமூக கிளினிக்குகளில் இருக்கும் பணியாளர்களைப் பயன்படுத்தி புதிய நடைமுறைகள் எந்த பாதிப்பும் ஏற்படாமல் இருப்பதை உறுதி செய்கிறது அரசாங்கம் சமூக அடிப்படையிலான கிளினிக்குகளின் பங்கை மேலும் விரிவுபடுத்துகிறது ஒன்ராறியோ மக்களுக்கான காத்திருப்பு நேரத்தைக் குறைக்கவும், பணியாளர்களைப் பாதுகாக்கவும் குறிப்பிட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இது சமூக சத்திர சிகிச்சை மற்றும் நோயறிதல் மையங்கள் மற்றும் அவற்றின் அதிநவீன வசதிகளை சிறப்பாக ஒருங்கிணைத்து பயன்படுத்த உதவுகிறது. மேலும், மக்கள் தங்கள் ஓஹிப் அட்டையைப் பயன்படுத்தி சத்திர சிகிச்சைகளை விரைவாகப் பெற வழிவகுக்கும்.

இந்தத் திட்டம் ஒவ்வொரு ஆண்டும் 14,000 ஒகிப் - காப்பீடு செய்யப்பட்ட கண்புரை சத்திர சிகிச்சைகளைச் செயயவும், கண்புரை (Cataract) மற்றும் MRI, CT இமெஜிங் போன்ற கூடுதல் சத்திர சிகிச்சைகளைச் செய்ய சமூக அடிப்படையிலான கிளினிக்குகளை விரிவுபடுத்தும். 2024ம் ஆண்டுக்குள் சமூக அடிப்படையிலான கிளினிக்குகளில் இடுப்பு மற்றும் முழங்கால் மாற்று சத்திர சிகிச்சைகளை விரிவுபடுத்துவதற்கான சட்டம் அறிமுகப்படுத்தப்படும்.

ஒன்ராறியோவில் பொது நிதியுதவி பெறும் சுகாதார சேவைகள் கிடைப்பதை அதிகரிப்பதன் மூலம், சிறப்பு சத்திர சிகிச்சைகளுக்காக தற்போது காத்திருக்கும ஒன்ராறியோவாசிகள் தங்களுக்குத் தேவையான உலகத்தரம் வாய்ந்த கவனிப்பைப் பெறுவதை ஒன்ராறியோ அரசாங்கம் உறுதிசெய்கிறது.

சத்திர சிகிச்சை மற்றும் நோயறிதல் பரிசோதனைகளை சரியான நேரத்தில் கண்டறிதலை அதிகரிப்பதற்கும், மக்களின் முன்கணிப்பு மற்றும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கும் இந்த நடவடிக்கைகள் முக்கியமானவை” என்று இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



எஸ். ராஜ்மோகன்

## பணிலமாடம் - 67

# மைக்ரோ திருமணங்கள்

நாள் நட்சத்திரங்கள் முறை கொள்ள, ஆயிரம் விருந்தினர்கள் சூழ்ந்திருக்க, மங்கல இசையும் மாங்கல்ய பாடல்களும் இசைக்க, உல்லாச-மான ஓர் அழகிய மண்டபத்தில் நடக்கும் திருமணங்களுக்குச் செல்லும் எங்களுக்கு மைக்ரோ திருமணங்கள் என்பது கொஞ்சம் புதிதாகத்தான் இருக்கின்றது.

அழகிய வேலைப்பாடுகள் கொண்ட திருமண மண்டபத்தின் இதமான குளிர் காற்றலைகள் எம்மைத் தழுவ, பிரமிக்கவைக்கும் மணவறை-யில் இருக்கும் மணவாளனை மின்கலன்கள் ஒளிவீச, செயற்கைப் புகைகளுக்கிடையே நன்நடையுடன் பவனிவரும் மணமகளை ஆயிரம் கண்கள் நோக்க, நடந்தேறும் திருமணங்களைப் பார்த்த எங்களுக்கு இந்த மைக்ரோ திருமணங்கள் வித்தியாசம்தான்.

மைக்ரோ திருமணமானது பொதுவாக ஐம்பது விருந்தினர்களுக்கு மேல் இல்லாத மிகவும் நெருக்கமானவர்களுடன் நடைபெறும் திருமண-மாகும். ஒரு திருமணத்திற்குத் தேவையான அனைத்து விதமான சடங்குகளும் நடைபெறும். ஆனால், அனைத்தும் சிறிய அளவிலான திட்டமிடலுடன், நேர்த்தியாக ஒழுங்கு செய்யப்-பட்டு நடைபெறும். மைக்ரோ திருமணங்கள் திருமணத்திற்கான செலவுகளைப் பெருமளவில் கட்டுப்படுத்தும் என்பதைத் தாண்டி தம்பதியின-ருக்கு மிகவும் நெருக்கமானவர்களுடன் மிகவும் அன்னியோன்னியமாக, சரியாகத் திட்டமிட்டு நடைபெறும் ஒன்றித்த நிகழ்வு என்பது குறிப்பிடத்தக்கது.

கோவிட் தொற்றுகளினால் ஏற்பட்ட பல மாற்றங்களில் இந்த மைக்ரோ திருமண முறைகளும் ஒன்று. கடந்த இரு வருடங்களில் திருமணம் செய்து கொள்ளத் திட்டமிட்ட ஐம்பத்தியெட்டு சதவீதமானவர்கள் திருமண செலவுகளைக் குறைத்து, மிகவும் நெருக்கமாக குடும்பத்தினரிடையே நடைபெறும் மைக்ரோ திருமணங்களையே விரும்பியதாக திருமணங்-கள் பற்றிய ஓர் ஆய்வு தெரிவிக்கின்றது. அத்துடன், தொடர்ந்து அதிகரித்து வரும் வட்டிவீதங்களும், வாழ்க்கைச் செலவுகளின் அதிகரிப்பும் மைக்ரோ திருமணங்களின் எண்ணிக்கையை இனிவரும் காலங்களில் மேலும் அதிகரிக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

சிறிய எண்ணிக்கையிலான குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுடன் மட்டுமே திருமணம் செய்து கொள்ளும் விருப்பத்தை பல தம்பதியினர் கொண்டிருப்பதால், மைக்ரோ திருமணங்கள் என்பது அறியப்படாத ஒரு விடயமாக இருக்காவிட்டாலும், இது வளர்ந்து வரும் ஒரு புதிய நடைமுறை-யாக இனிவரும் காலங்களில் இருக்கும். கனடிய திருமண திட்டமிடல் நிறுவனத்தின் (The Wedding Planner Institute) கணிப்பின்படி மைக்ரோ திருமணத்திற்கு இரண்டாயிரம் டாலர்கள் முதல் பதினைந்தாயிரம் டாலர்கள் வரை செலவாகும் என்று தெரிவிக்கின்றது. அத்துடன் வளர்ந்து வரும் மைக்ரோ திருமணங்களை ஒழுங்குபடுத்தும் சேவைகளில் திருமணங்களைத் திட்டமிடும் நிறுவனங்கள் தற்சமயம் ஆர்வம் காட்டிவருவதும் குறிப்பிடத்தக்கது.

வருடாவருடம் அதிகரித்துவரும் திருமணங்களில் பல தம்பதியினர் மைக்ரோ திருமணங்களைத் தெரிவு செய்தாலும் தமிழர்களைப் பொறுத்தவரையில் ஆடம்பரமான திருமணங்களே அதிகளவில் இடம்பெற்று வருகின்றன. இலங்கையிலும் கனடாவிலும் திருமணங்கள் மிகவும் கோலாகலமாகவே நடைபெறுவது வழக்கமானது. அது மட்டுமல்லாமல் ஒரு வகையில் தத்தமது குடும்ப அந்தஸ்தை வெளிப்படுத்தக் கிடைக்கும் ஒரு சந்தர்ப்பமாகவும் திருமணங்கள் இருந்து வந்துள்ளன. இதன் காரணமாக தமது வசதி வாய்ப்புகளையும் மீறிய திருமணங்கள் இப்பொழுதும் நடைபெற்று வருகின்றன.

மைக்ரோ திருமணங்கள் ஒரு புறமிருக்க இப்பொழுது புதிய நடைமுறையாக வந்திருக்கின்றது வெளிப்புறத் (outdoor) திருமணங்கள். தமிழர்களின் திருமண பாரம்பரியங்கள் பிறழாது பூங்காக்கள் மற்றும் வெளிப்புறங்களில் நடைபெறும் திருமணங்கள் மிகவும் அழகாகவும், இயற்கையோடு ஒன்றித்த-தாகவும் இருப்பது குறிப்பிடத்தக்கது. ஆனால், தமிழர்களது பாரம்பரிய உடையலங்காரங்கள் வெளிப்புறத் திருமணங்களுக்கு உகந்தவைகளா என்பதும் ஒரு கேள்விக்குறியாகவே இருக்கின்றது. பல வெளிப்புறத் திருமணங்-கள் திறந்த வெளிகளில் வெய்யில் நிறைந்த, காற்றோட்டமில்லாத சூழலில் நடைபெற்று அந்த திருமணத்தில் கலந்து கொள்ளும் விருந்தினர்களுக்கு பல அசௌகரியங்களையும், சோர்வுகளையும் கொடுத்துவிடுகின்றதை ஏற்றுக்கொண்டேயாக வேண்டும்.

தமது திருமணங்கள் அழகாகவும், வித்தியாசமாகவும் இருக்க வேண்டும் என்பது அனைத்துத் தம்பதியினரின் விருப்பமாக உள்ளது. ஆனால், வெளிப்புறத் திருமணங்களில் கலந்து கொள்ளும் விருந்தினர்களுக்கு சரியான வசதிகளை செய்து கொடுப்பதையும் மறந்துவிடக்கூடாது. மணமக்களுக்கு மட்டும் தற்காலிகமான குளிரூட்டிகள் இதமான காற்றை வழங்க, வந்திருக்கும் விருந்தினர்கள் மதிய வெய்யிலில் இளைப்பாற நிழல் கூடக் கிடைக்காமல் தவித்த சந்தர்ப்பங்களும் உள்ளன.

வாழ்வியலில் ஓர் ஆணும், பெண்ணும் ஒன்றிணைந்து வாழ எண்ணிய பொழுதுகளில்தான் நயத்தக்க நாகரிக சமூகங்களுக்கான ஒழுங்கு நிலைகள் உருவாக்கப்பட்டன. மனங்கள் இணைந்து ஒன்றுபட்டு வாழும் மணமக்கள் தம்மை சார்ந்தவர்களிடம் இணைந்து வாழ எண்ணிய பொழுதுகளில்தான் அவரவர்களின் பாரம்பரியக் கட்டுப்பாடுகளுக்கு ஏற்றபடி திருமண முறைகள் தோன்றின. பின்னர் சமூக வளர்ச்சிகளுக்கும், சமுதாய மாற்றங்களுக்கும் ஏற்ப திருமண முறைகளில் பல மாறுதல்கள் தோன்றின. இதன் வழியாக இன்றும் தொடர்ந்து திருமண முறையில் பல மாற்றங்கள் நிகழ்கின்றன. நிகழ்ந்து கொண்டே இருக்கப் போகின்றன. ஏனெனில் அனைத்தும் மாறும், மாறிக் கொண்டே இருக்கும் என்பது மாறாத கோட்பாடு.



கனகேஸ்வரி நடராஜா

# வாசிப்பு: புதிய பரிமாணங்கள்

எனது சினேகிதி ஒருவர் எப்போதும் தனது கையிலிருக்கும் தொலைபேசியை நோண்டியபடியே இருப்பார். கர்ணனுடைய கவசத்தைக்கூட பிரித்துவிடலாம். ஆனால், அவரின் கையிலிருக்கும் ஸ்மார்போனை அவரிடமிருந்து பிரித்துவிட முடியாது. அவரிடம் ஏகப்பட்ட தொடர்பு விலாசங்கள் இருந்தன. அவற்றுள் எவ்வளவு பேரை அவருக்கு நன்றாகத் தெரியுமென்பது ஐயத்துக்குரிய விடயம். ஒரு நாள் தனது தொலைபேசிக்கு வந்த குறுஞ்செய்திகளையும் துணுக்குகளையும் வாசிக்காமலே பலருக்கும் பகிர்ந்து கொண்டிருந்தார். இதுபற்றி விசாரித்தபோது, தனக்கு பலரும் பல விடயங்களை அனுப்புவதாகவும், தான் அவற்றை வாசிப்பதே கிடையாது என்றும் ஆனால் பலரோடும் தாராளமாக அவற்றைப் பகிர்வதாகவும் கூறினார். இவ்வாறு அனுப்புகிறவற்றை தான் பார்த்திருப்பேன் என்பதற்கு செய்திகளின் முன்னாலிருக்கும் குறியீடு காட்டிக்கொடுக்கும்தானே என சமாதானம் கூறினார்.

இவர் போன்று இவர் அனுப்புபவற்றை பெறுபவர்களில் எத்தனைபேர் செய்கிறார்களோ தெரியவில்லை. இது இன்று வாசிப்புக்கு ஏற்பட்டுள்ள பரிதாபமான புதிய பரிமாணம். கண்மூடித்தனமாக இத்தகைய ஒரு செயலை இன்று பலரும் செய்து திருப்தியடைகிறார்கள்.

சில வருடங்களுக்கு முன்புவரை குறிப்பிட்டளவு தினசரி பத்திரிகைகளே வெளிவந்தன. அதேபோன்று சஞ்சிகைகளும் அரைடசின்கூட இருக்கவில்லை. சந்தா கட்டினால் தவிர, அவை எமது கைகளுக்கு வந்து சேராது. தாயகத்தில் மட்டுமன்றி இங்குகூட வீரகேசரியை, ரொறன்ரோ ஸ்டாரை, கல்கியை, ஆனந்தவிகடனை, றீடர்ஸ் டைஜஸ்ரை காசு கொடுத்து வாங்கினோம். அவற்றின் ஒவ்வொரு பக்கங்களையும் பார்த்துப் பார்த்து வாசித்தோம். வீட்டிலிருக்கும் அத்தனை பேரும், சில சமயங்களில் வீட்டில் வேலை செய்பவர்கள்கூட ஆற அமர இருந்து வாசித்தார்கள். சில பக்கங்களை அடையாளப்படுத்தி பிள்ளைகளை வாசிக்கும்படியும் கூறுவோம். சில கட்டுரைகளை வெட்டியெடுத்து பேணி பாதுகாப்பதும் உண்டு. மொத்தத்தில் காசு கொடுத்து நாங்கள் வாங்கிய பத்திரிகைகள், சஞ்சிகைகளிலிருந்து எவ்வளவு பயனைப் பெறமுடியுமோ அவ்வளவுக்குப் பெற்றுவிடுவோம்.

இன்று பத்திரிகை தர்மம் மாறிவிட்டது. சில பத்திரிகைகளில் வாசிப்பதற்கான விசயதானமே குறைந்துவிட்டது. சஞ்சிகைகள் புது உருவம் பெற்றுவிட்டன. அவற்றில் வரும் விடயங்களும் படங்களும் கவர்ச்சியையே மையமாகக் கொண்டுள்ளன. முன்பெல்லாம் ஆனந்தவிகடன் என்றால் ஒருவகையாகவே இருந்தது. இன்று மக்களின் ரசனைக்கேற்ப மகளிர் மலர், சமையல் மலர் என பலவகையாக மாற்றம் பெற்றுவிட்டன. பொதுவாக இந்திய சஞ்சிகைகளைப் பார்ப்பின் முதலில் எங்களை வரவேற்பது நடிகர்களின் படங்களும் சினிமாத் தகவல்களுமே. இதற்காக அவற்றின் ஆசிரியர்களையோ வெளியீட்டாளர்களையோ குறைகூற முடியாது. மக்களின் ரசனை இன்று அவ்வாறு மாறிவிட்டது. அதற்கேற்றவாறு பிரசுரங்கள் வராவிட்டால் தொழிலில் லாபமீட்ட முடியாது. இப்போதெல்லாம் இந்த வெளியீடுகளைக் கையிலெடுத்தால் சில மணித்தியாலங்களில் வாசித்து முடித்துவிடுகிறோம். முன்பு ஒரு முழுநாள் ஆயுளைக் கொண்டிருந்த தினசரிப் பத்திரிகைகள் இன்று சில நிமிட ஆயுளைக் கொண்டு அகால மரணமடைந்து விடுகின்றன.

எல்லாவற்றுக்கும் மேலாக இன்று அரசியல்வாதிகளும் மற்றும் பலரும் பணம் கொடுத்துப் பத்திரிகைகளில் தங்களைப் பற்றிய செய்திகளை வெளியிடத் தொடங்கியுள்ளனர். பல பத்திரிகைகளில் வரும் செய்திகள் அல்லது விடயங்கள் எங்கோ ஒரு இணையத்தளத்தில், யு-ரியூபில் அல்லது வேறொரு கணினி நிரலிலிருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்யப்பட்டிருக்கும். இதனால் எல்லாப் பத்திரிகைகளிலும் இடம்பெறும் விடயங்கள் ஒரேமாதிரியாக அமைந்து விடுகின்றன. வாசிப்பவர்கள் எதற்காக ஒரே விடயத்தை பல பத்திரிகைகளில் வாசிக்க வேண்டுமென்று கருதி கிடைக்கும் பத்திரிகைகளை மீள்சுழற்சிப் பெட்டிக்குள் தஞ்சம் புகுத்தி விடுகின்றனர்.

இப்பொழுது வாட்ஸ்அப், மின்னஞ்சல் என்பன குழுக்களாக இயங்குகின்றன. பலவகையான குழுக்கள் அவற்றில் அங்கம் வகிப்போரின் தொகை 20-25 வரை உள்ளது. ஒருவர் பதிவு செய்யும் விடயம் எல்லோரையும் போய்ச்சேருகிறது. அதேநேரம் ஒருவர் எழுதும் பதிலும்கூட எல்லோரையும் போய்ச்சேருகிறது. பல பதிவுகள் எமது ரசனைக்கேற்றதாக இருப்பதில்லை. வாசிக்காமல் விடலாமென்றால் ஏனைய அங்கத்தவர்களின் பதில்களைப் பார்க்கும்பொழுது, எங்கே அந்த ஓட்டத்திலிருந்து நாங்கள் விடுபட்டுப் போவோமோ என்று மனம் அங்கலாய்க்கிறது. இதனால் சில சமயங்களில் எமது நேரத்தில் சில மணித்தியாலங்களைக்கூட இது விழுங்கி விடுகிறது. இதனைப் பார்க்கும்போது எங்கள் மேல் வாசிப்பு திணிக்கப்படுகிறது என்ற உணர்வே ஏற்படுகிறது. அதேசமயம் இதிலிருந்து தப்பும் வழியும் தெரியவில்லை.

இன்று ஒலி வடிவத்தில் புத்தகங்கள், சிறுகதைகள், பத்திரிகைகள் வெளிவரத் தொடங்கியுள்ளன. இயந்திரமயமான வேக வாழ்க்கையில் அன்றாட கடமைகளை செய்தபடியே இளம் வயதினர் தொடக்கம் முதியோர்வரை கேட்கிறார்கள். தமிழை நன்றாகவும் விரைவாகவும் வாசிக்கும் திறனில்லாத இன்றைய இளம் தலைமுறையினருக்கு பொன்னியின் செல்வன் திரைப்படத்தை இந்த ஒலிவடிவில் கேட்கக் கூடியதாக இருந்தது. இதனையும் வாசிப்பின் ஒருவகைப் பரிமாணம் என்று சொன்னால் தவறில்லை.

துணுக்குகள், சமையல் குறிப்புகள், மருத்துவ விளக்கங்களையும் உள்ளங்கையிலுள்ள தொலைபேசியில் 24,60,60 செக்கண்டுகளும் வாசிக்கிறார்கள். பொழுதுபோக்குக்காக வாசிப்பது, பிறரைத் திருப்திப்படுத்த வாசிப்பது, குழு அங்கத்தவர்களுக்காக வாசிப்பது என பலவகையில் வாசித்தல் இலவசமாகவும் தேடி அலையாமலும் இடம்பெறுகிறது.

வாசிப்பு என்பது மிகவும் பவுத்திரமான ஒரு செயல். மனமும் எண்ணமும் ஒன்றிப்போக புலனைச் செலுத்த வேண்டும். தொழில்நுட்ப உபகரணங்களில் வரும் விடயங்களை வாசிப்பதற்கு மேதாவித்தனமோ அமைதியான மனமோ தேவையில்லை. ஆனாலும் இது வரவேற்கப்பட வேண்டிய விடயம். இதனால் பலரும் பலரோடு தொடர்பு கொண்டு மகிழ்ச்சியாக இருக்கிறார்கள்.

இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சியால் பல வெளியீடுகளை இலவசமாகப் பெற முடிகிறது. இவ்வாறு வாசிப்பவற்றுள் சிலவற்றை பாதுகாத்தும் வைக்க முடிகிறது. புத்தகத் திருவிழாக்களின் வெற்றி இதற்கு ஒரு உதாரணம். வாசிப்பு எத்தனை புதுப்புது பரிமாணங்களை எடுத்தாலும் அதன் தரமும் பலமும் என்றுமே அழியாது என்பது எனது திடமான நம்பிக்கை.



இரா. சம்பந்தன்

# ஔவை பேசிய அரசியல் !

அயல் நாடுகளை வென்று சோழப் பேரரசை விரிவு படுத்திய பின்பு அந்தச் சோழ மன்னனுக்குப் பெரும் பிரச்சனை ஒன்று எழுகின்றது. கைப்பற்றிய புதிய இடங்களைக் கட்டியாள்வதற்கு நிறைய நிர்வாகிகள் தேவைப்பட்டார்கள். யாரை நியப்பது. யாரை நியமித்தால் மத்திய அரசுக்கு கெட்ட பெயர் ஏற்படாமல் நடந்து கொள்வார்கள்.

அவன் காலத்திலும் நாட்டிலே பிராமணர் சைத்திரியர் வைசியர் சூத்திரர் என்ற நான்கு வருண மக்களுந்தான் இருந்தார்கள். அந்த நான்கு பிரிவிலும் படித்தவர்கள் நிறைய இருந்தார்கள். நூறாண்டு - களுக்கு முற்பட்ட ஆங்கிலேயர் போல அவன் ஒரு சாராரிடம் மட்டும் அதிகாரத்தை ஒப்படைத்து விடவில்லை. பலதடவைகள் சிந்தித்தான் அந்த மன்னன். முடிவு கிடைக்கவில்லை.

மந்திரிகளைக் கேட்டால் தங்களுக்கு வேண்டியவர்கள் பெயர்ப் பட்டிய -லைத் தருகின்றார்கள். அந்தப்புரம் சென்றால் அங்கும் ஆளுக்கு ஒரு பட்டியலை நீட்டுகின்றார்கள் மனைவிமார்கள். பெரும் போர்களை வென்று தந்த தளபதிகள் கூட யார் யாருக்காகவோ பதவி கேட்டுச் சிபார்சு செய்கின்றார்கள்.

யார் பேச்சைக் கேட்பது என்று மன்னன் தவித்துக் கொண்டிருந்த போது தான் மன்னனைக் காண்பதற்கு ஔவை வருகின்றாள். அவளைக் கண்டதும் மிகவும் படித்த கிழவி அவளிடமாவது ஒரு முறை பேசிப் பார்க்கலாமா என்று தோன்றுகின்றது அரசனுக்கு.

யாருமில்லாத தனியிடத்துக்கு அவளை அழைத்துச் சென்று ஆச்சி எனக்கு இப்படியான பிரச்சனை வந்திருக்கின்றது என்று அனைத் - தையும் ஔவையிடம் சொல்லி எனக்கு ஏதாவது அறிவுரை சொல்லக்கூடிய அரசியல் அனுபவம் உனக்கு இருக்குமா என்று கேட்டான் அந்தச் சோழன்.

மன்னனே இந்த நான்கு வருணங்களதும் குணாதியங்களை முதலில் உனக்குச் சொல்லுகின்றேன் யாரை நியமிப்பது என்று நீயே முடிவு செய்து கொள்ளவேண்டும்.

முப்புரி நூலணிந்த பிராமணர்களை எடுத்துக் கொண்டால் அவர்கள் மிகவும் படித்தவர்கள். வடமொழியை மட்டுமே உயர்மொழியாகவும் தொன்மையானதாகவும் நம்புபவர்கள். வேதங்களைக் கற்று ஆகம நியதிப்படி நடப்பவர்கள். தங்களை உயர்ந்தவர்கள் என்று நினைப்பவர்கள். அவர்களை ஆட்சியதிகாரத்திலே இருத்தினால் ஒருநாட்டிலே மதச்சார்பின்மை படிப்படியாக மறைந்து ஆட்சிக்குக் கெட்ட பெயர் வரும்.

உன்னைப் போன்ற சைத்திரிய குலத்திலே பிறந்தவர்களுக்குப் பதவி கொடுத்தால் தங்கள் மூலதனமான அஞ்சாமையை வைத்துக் கொண்டு சின்னப் பிரச்சனைகளுக்கக் கூட கலகம் செய்து எப்பவும் பகையும் போர்களுமே நடக்க அதிகம் வாய்ப்பு ஏற்படுத்துவார்கள். சமாதானப் போக்கை எண்ண மாட்டார்கள் அது ஒரு நாட்டுக்கு நல்லதல்ல.

வைசியர்கள் வியாபாரிகளப்பா. அவர்கள் மனம் எப்போதும் செல்வத்தை பெருக்குவதிலும் பதுக்குவதிலும் தான் முனைந்து நிற்கும். ஆட்சியதிகாரத்துக்கு வந்தால் வரி விதிப்புகள் அதிகமாகும். மக்கள் வாழ்வு நலிவடைந்து வாழ்க்கைத் தரம் வீழ்ச்சியடையும். மக்கள் உனது ஆட்சியை வெறுப்பார்கள்.

கடைசியாகக் காணப்படும் சூத்திரர்கள் என்பது பல குலப்பிரிவுகளை உள்ளடக்கியது. உழவுத் தொழில் செய்யும் வேளாளர்கள் முதற் கொண்டு கடினமான பல பணிகளைச் செய்யும் அடமட்ட மக்களைக் கொண்ட பிரிவு அது. அதிலே இருந்து அரசியல் பதவிகளுக்கு வருபவர் - கள் நம்பிக்கையானவர்களாக இருப்பார்கள். அரசுடன் என்றுமே நல்ல வழிகளில் இணங்கி நடக்கத் தெரிந்தவர் - களாகவும் இருப்பார்கள்.. அவர்களின் துணை ஒரு ஆட்சிக்கு மிகவும் உதவியாக இருக்கும்.

இந்த நான்கு பிரிவினரைப் பற்றியும் நான் கொண்டிருக்கும் அபிப்பிராயம் இதுதான். இனி அரசன் என்ற முறையிலே நீ தீர்க்கமாக யோசித்து உன்னுடைய நாட்டுக்கும் ஆட்சிக்கும் மக்களுக்கும் யாரைப் பதவியில் அமர்த்தினால் அதிக நன்மை உண்டாகுமோ அவர்களை நியமனம் செய்வாயாக என்றாள் ஔவை.

நூலெனிலோ கோல்சாயும் நுந்தமரேல் வெஞ்சமராம்
கோலெனிலோ அங்கே குடிசாயும் - நாலாவான்
மந்திரியும் ஆவான் வழிக்குத் துணையாவான்
அந்த அரசே அரசு

- (ஔவையார் தனிப்பாடல்கள்)

இதன் பொருள்: நூலெனிலோ கோல்சாயும் - பூனூலணிந்த பிராமணர்களிடம் ஆட்சியதிகாரம் போனால் அவர்களால் நடுநிலையாக நிற்க வேண்டிய அரசாங்கம் ஒரு குறிப்பிட்ட மதத்தின் பக்கமே சாய்ந்து விடும்.

நுந்தமரேல் வெஞ்சமராம் - உனது அரச குலத்திலே பிறந்தவர்களுக்குப் பதவி கொடுத்தால் எதற்கெடுத்தாலும் தேவையற்ற கொடிய போர்கள் தூண்டப்பட்டு நாடு நலிவடையும்.

கோலெனிலோ அங்கே குடிசாயும் - நிறையை அளவிடும் தராசு கோலோடு சம்பந்தப்பட்ட வைசியருக்குப் பதவி கொடுத்தால் அனைத்துமே வியாபார எண்ணமாகி குடிமக்கள் வாழ்க்கைத் தரம் வீழ்ச்சியடையும்

நாலாவான் - நாலாவதாக இருக்கின்ற சூத்திரன்

மந்திரியும் ஆவான் வழிக்குத் துணையாவான் - மந்திரி - யாக பதவி வகிப்பதற்கும் பொருத்தமானவன் நம்பிக்கை உள்ளவனாக நடந்து ஒரு நல்லாட்சிக்கு வழித்துணையாகவும் வரக்கூடியவன்.

அந்த அரசே அரசு _ அவனை ஆட்சி மையமாகக் கொண்டு இயங்கும் ஒரு அரசைத்தான் நல்ல அரசாங்கம் என்று சொல்ல முடியும். இது என்றோ ஔவை பேசிய அரசியல். இன்றைய தென்னகச் சிக்கல்களுக்கு எல்லாம் என்றோ விடை சொல்லிப் போய்விட்டாள் அந்த மூதாட்டி.

பொன்னையா விவேகானந்தன்



# மரபும் மாண்பும் 33

## தாள் பணிந்து வணங்குதல்

தொன்றுதொட்டு தமிழர் பண்பாட்டில் கடைப் - பிடிக்கப்பட்டுவரும் மரபுசார் நிகழ்வுகளில் ஒன்று 'மூத்தோர் கால்களில் விழுந்து வணங்குதல்' ஆகும். தாள் பணிதல் என்ற இந்த ஒப்பற்ற பண்பு திருக்குறளில் சுட்டிக்காட்டப்படுவதை நாம் காணலாம்.

இறைவாழ்த்தில், நல்தாள் தொழாஅர் எனின்', 'மாண் அடி சேர்ந்தார்', 'வேண்டாமை இலான்அடி' 'உவமை இல்லாதான் தாள்', 'ஆழி அந்தணன் - தாள்','எண்குணத்தான் தாள்', 'இறைவன் அடி சேரார்'என ஏழு குறள்களில், இறைவன் பாதங்களை வணங்க வேண்டும் என்பதைக் குறிப்பிடுகிறார் வள்ளுவர். இவ்வாறு இறைவனின் தாளை வணங்க வேண்டும் என்று வலியுறுத்துவதற்குரிய காரணம் என்ன என்பதை நாம் சற்றே நோக்க வேண்டும்.

நாம் ஒருவரிடத்தே பெருமதிப்புக் கொள்கின்ற நிலையில் அவரை வணங்குவதற்கான உணர்வு உள்ளத்திடையே தோன்றுகின்றது. அந்த உணர்வின் வளர்ச்சி நிலைகளில் ஒன்றுதான் அடிபணிந்து வணங்குதல்.

பணிதல் என்பதிலிருந்து அடிபணிதல் என்பது வேறுபட்டது. பெரியோரை, பதவி அதிகாரத்தில் உயர்ந்தோரைக் காணும்போது மரியாதை அல்லது அல்லது மதிப்புக் கொடுக்கும் நோக்கில் பணிந்து நிற்றல் மானுடப் பண்புகளின் பாற்பட்டது. ஆனால் பெருமதிப்பு அல்லது போற்றுதற்குரியவரிடத்தே அடிபணிதல் என்றால் அது தன்னை முழுமையாக ஒப்புவிக்கும் நிலையாகும். இதைப் பெரிதும் இறையடியார்க - ளிடமும் குருபக்திமிக்க சீடர்களிடமும் காணலாம்.

தமிழர் பண்பாட்டிலே நிலைத்து நிற்கும் காலில் விழுந்து வணங்கி ஆசி பெறுதல் என்பது ஓரளவுக்கு மேற்கூறிய நிலையோடு ஒத்திருப் - பினும், பண்பாடு மற்றும் அறிவியல் நோக்கில் சற்றே மாறுபட்டதாகும்.

பண்பாடு சார்ந்த இப்பணிதல் பெரியோரைப் போற்றுதல், ஆசி பெறுதல் என்ற இருநிலைக - ளைக் கொண்டது. பொதுவாகவே பெரியோருக்கும் மூத்தோருக்கும் பணிதல் தமிழர் பண்பாட்டு மரபு. இவர்களுள் பலவகையால் சிறந்து விளங்கும் பெரியோர்கள், மூத்தோர்கள் போற்றுதற்குரியவராகத் திகழ்வர். இவர்களும் பெற்றோரும் அடக்கம். இவர்களின் கால்களில் நெற்றிபடப் பணிந்து எழுதலும் தமிழ்ப் பண்பாட்டு மரபு.

பெரியவர்களிடத்தே ஆசி பெறுதல் தொன்று - தொட்டே வழக்கத்தில் இருந்து வருகின்றது. இதுவொரு அறிவியல் சார்ந்த செயற்பாடு என ஆய்வாளர் கருதுகின்றனர். ஒருவரிடத்தே தோன்றுகின்ற எண்ணங்களின் அலைகள் (waves) அவருடைய உள்ளங்கைகள் உள்ளங்கால்கள் வாயிலாக வெளியேறு - கின்றன என்பது அறிவியல். சில கடவுளரின் உருவ ஓவியங்களை உற்றுப் பாருங்கள். அவர்கள் கைகளில் இருந்து ஒளி பாய்வதாக வரைந்திருப்பர்.

அலைகள் வெளியேறுவதைப் போன்றே மானுட உடலில் அலைகளை உள்வாங்கும் பகுதி நெற்றிப்பொட்டு ஆகும். நெற்றிப்பொட்டின் வழியாகத் தீய அலைகள் உள்வாங்கப்படுவதைத் தடுப்பதற்காகவே குழந்தைகளும் பெண்களும் பொட்டிட்டுக் கொள்வர்.

குறிப்பாக சிறுகுழந்தைகளுக்குக் கண்ணூறு பட்டுவிடக்கூடாது என்பதற்காக நெற்றியிலே பெரியளவில் கறுப்புப்பொட்டு இடுவர். அக்குழந்தை பற்றிய பிறரின் கருத்துகள் அலைகளாக அக்குழந்தையைத் தாக்கிவிடக்கூடாது என்பதற்காகவே பொட்டிட்டு நெற்றிப்பொட்டைக் காப்பர்.

நீங்கள் ஒரு சாவுச்சடங்குக்குச் செல்கின்றபோது அங்கே துயர உணர்வு பெருகு- வதற்கும் கோவிலுக்குச் செல்கின்றபோது அங்கே பக்தியுணர்வு பெருகுவதற்கும் காரணம் அவ்வவ்விடங்களில் ஆதிக்கம் செலுத்துகின்ற அலைகளே.

பல்வகையாலும் சான்ற பெரியோர்கள் சிந்தையில் என்றுமே அறநிலை வழுவாத எண்ணங்களைக் கொண்டிருப்பர். ஒழுக்கங்களால் வலிமையான எண்ண அலைகளை வெளியிட வல்லவராக இருப்பர். அத்தகையோர் ஆசி பெறுவோரின் நெற்றிப்பொட்டில் உள்ளங்கையை வைத்து வாழ்த்துவர். அவர்கள் வாழ்த்து வலிமையான ஆசி அலைகளாக வாழ்த்துப் பெறுவோரிடத்தே உட்சென்று அவர்களின் சிந்தையில் பயன்மிகு தாக்கங்களை ஏற்படுத்தும். இவ்வாறான பெரியோர்களின் உள்ளங்கால்களின் வழியேயும் இவ்வலைகள் வெளியேறும். அந்த நன்மைதரும் வாழ்த்து அலைகளை உள்வாங்கும் நிலையில்தான் நெற்றிப்பொட்டு அவர்களின் கால்களில் படும்வகையில் வீழ்ந்து வணங்கி ஆசி அல்லது வாழ்த்துப் பெறுவர்.

துயரம், மகிழ்ச்சி, பக்தி என்ற உணர்வுமிக்க நிலைகளில் எண்ண அலைகளின் வெளிப்பாடு பெருமளவில் ஆளுமை செலுத்தும்போது அங்கே பலருடைய கண்களிலும் கண்ணீர் பனிப்பதைக் காணலாம்.

இந்த அறிவியல் சிந்தனையைத் தமிழர் எப்போது பெற்றுக்கொண்டனர் என்பதை நாம் அறிவதற்கில்லை. எனினும் இது தொன்றுதொட்டு வரும் மரபுசார் நடத்தை என்பதுவும் இலக்கியச் சான்றுகளின் வழிகளியே உறுதியாகின்றது.

இக்காலத்தில் பெற்றோர், கற்பிக்கும் ஆசிரியர்கள், துறைசார் பெரியோர்கள், வயதில் முத்தோர் போன்றவர்களின் கால்களில் வீழ்ந்து வணங்கும் பண்பாடு அருகி வருகின்றது. பெரியோரை வணங்கும் செயல் என்றுமே பாராட்டுக்குரியது. பெரியோரும் அகம்மிக மகிழ்ந்து நல்லாசிகளை வழங்குவர். அவை முன்னிலை - யில் பெரியோரைப் பெருமைப்படுத்தும் செயலாகவும் இது அமைகின்றது.

பெற்றோர் சிறுவயதிலிருந்தே இப்பழக்கத்தை இளையோருக்குப் பழக்க வேண்டும். இச்செய்கையினால் விளையும் பயன்களை விரிவாக எடுத்துரைக்க வேண்டும். காலில் விழுந்து வணங்குவது வெட்கமான செயல் என சிலர் கருதுகின்றனர். பண்பும் அன்பும் மனதில் இருந்தால் போதும் எனச் சிலர் கூறுவர். இவை வெளிப்பட்டால்தான் பிறரால் உணர முடியும். அதன் பெறுமானத்தை அறிய முடியும்.'எல்லார்க்கும் நன்றாம் பணிதல்'என்கின்றார் வள்ளுவர்.

தமிழர் எங்கு வாழ்ந்தாலும் எமது பண்பாட்டு மரபுகளை அழியாது போற்றுவோம்.

குறிப்பிடத்தக்க அறிவியல் பண்பாட்டுக் கூறுகளைக் கொண்ட இந்தச் செய்கை இக்காலத்தில் பலவாறான கருத்துரைகளுக்கு உள்ளாகி வருகின்றது.



குயின்ரஸ் துரைசிங்கம்

# தெரிந்ததில் தெரிந்தது - 5

## எம் முதியோரிடம் தொலைந்து போன தைரியம்

வாழ்க்கையில் எத்தனை எத்தனை பிரச்சனை-களையெல்லாம் வெட்டியாடி களம் கண்டவர்கள் நீங்கள் தெரியுமா? இப்போது இந்த முதல்தர மேற்குலக நாடுகளில் வாழும் இளையவர்களுக்கு, நீங்கள் கடந்து வந்த கரடு முரடான பாதை பற்றித் தெரியாது, அதாவது தெரிந்தாலும், அதன் அனுபவரீதியான துன்பத்தை உய்த்துணரும் வாய்ப்பு இல்லை என்பதை சென்ற மாதக் கட்டுரையில் பார்த்தோம். அப்போ தீர்வு என்ன?

மீண்டும் மனதளவில் அந்த மனத்துணிவை நீங்கள் துளிர்க்க வைப்பதுதான் ஒரே தீர்வு. என்னால் முடியும் என்று எதிர்நீச்சல் போட்டு, சவாலே சமாளி என்று வெற்றியோடு கடந்துவந்த பாதைகளில் உங்களுக்கு இருந்த மனத் துணிவை நீங்கள் மீளவும் துளிர்க்க வையுங்கள். உடல் இடம் தராது என்பது உண்மைதான். ஆனால், நீங்கள் உங்கள் கடந்தகால வாழ்க்கையில் கொண்டிருந்த துணிவை யோசித்துப் பார்த்தால், நீங்கள் இப்போதும் இன்னும் கொஞ்சம் துணியலாம் என்பது உங்கள் மனதிற்குப் புரிய ஆரம்பிக்கும்.

வயிற்றில் பிள்ளையுடன், பொது வைத்திய - சாலை மலசல கூடத்திற்கு கும் இருட்டில் அத்தனை தூரம் போய் வந்தது எப்படி? யார் அந்த துணிவைத் தந்தார்கள். 30 வருட போர்ச் சூழலில், மோசமான இடப்பெயர்வு - களில், கடுமையான பொருளாதாரச் சிக்கல்களில், திடீர் உயிர் இழப்புக்களில், சொத்துகள் பறிபோன துயரங்களில், மீண்டும் எழுவதற்கு உங்களிடம் இருந்த அந்தத் துணிவும் உந்துசக்தியும் இப்போது எங்கே போனது?

விழித்துக் கொள்ளுங்கள். கே.எப்.சி. உரிமையாளர் கேணல் ஹாலன்ட் சான்டர்ஸ் அவர்கள் ஒரு மிகப் பெரிய உதாரணம். வயது ஒரு பொருட்டல்ல. தான் நடத்திய எரிபொருள் நிரப்பு நிலையத்தில் விற்ற உணவுகளில் அவர் அறிமுகம் செய்ததே அந்த கோழிப்பொரியல். இருப்பினும் அவரது கோழிப்பொரியல் அதிக மக்களிடம் சென்றடையவில்லை.

தனது 65வது வயதில், அதே கோழிப்பொரிய-லுடன் அமெரிக்கா மற்றும் கனடாவிலுள்ள பல உணவகங்களிடம் சென்று அதை அறிமுகம் செய்ய முயற்சித்தார். எந்த முயற்சியும் பயனளிக்கவில்லை. இறுதியில் கென்ரக்கி சிக்கின் என்ற பெயரில் உணவகத்தை அறிமுகம் செய்தார். பத்து வருடத்தில் வடஅமெரிக்காவில் 600 கிளைகள் உருவாகின. தற்போது 115 நாடுகளில் 16,000 ற்கும் அதிகமான கிளைகள் இவர் அறிமுகம் செய்த அதே கோழிப்பொரியலை விற்று கோடிகோடியாக உழைத்துக் கொண்டிருக்கின்றன.

கோல்டா மேயர் அம்மையாரை அறியாதவர் இல்லை. இஸ்ரேல் நாட்டின் முதல் பெண் பிரதமராக பதவியேற்கும்போது அவருக்கு வயது 71. இஸ்ரேல் என்ற நாடு காணாமல் போய்விடும் என்று கவலையடைந்த அம்மையார், அமெரிக்காவுக்கு வந்து, அங்கு வாழும் ஒவ்வொரு யூதனும் மாதம் ஒரு டொலரை தனது நாட்டுக்கு அன்பளிப்பு செய்யுமாறு கோரிக்கை விடுத்தார். அவரது ஒரு டொலர் கோரிக்கையைக் கேட்டு பலர் எள்ளி நகையாடினர்.

ஆனால், ஒரு சில நாட்களில் ஆயிரமாயிரம் யூதர்கள் அந்த ஒரு டாலரைக் கொடுக்க எழுத்தில் உறுதி கொடுத்தனர். அந்த உறுதியை உங்கள் பிள்ளைகளுக்கும் அனைத்து வாரிசுகளுக்கும் உறுதிமொழியாக வழங்குங்கள் என்று கோரினார். இன்றுவரை, இஸ்ரேல் என்ற மிகப் பலம்வாய்ந்த பணக்கார நாட்டின் வெற்றிக்கு, அன்று வித்திட்டவர் 71 வயதில் முயற்சியெடுத்த கோல்டா மேயர் அம்மையார்.

ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு 27 ஆண்டுகள் சிறையில் இருந்த நெல்சன் மண்டேலா, விடுதலையாகி, ஜனாதிபதியாக பதிவியேற்கும்போது அவருக்கு வயது 76.

இஸ்ரேல் பாலஸ்தீன யுத்தத்தில், பெய்ரூட் ஆக்கிரமிக்கப்பட்டு கடும் உயிரிழப்பு நிறைந்த சூழ்நிலை தோன்றியபோது, தற்காலிக யுத்த நிறுத்தம் கேட்டு, அங்கிருந்து 37ற்கும் அதிகமான குழந்தைகளை உயிருடன் மீட்டெடுக்கும்போது அன்னை திரேசாவுக்கு வயது 72. சோவியத் ஆட்சியாளருடன் பேச்சுவார்த்தை நடத்தி, பாரிய பூமியதிர்வில் படுகாயமடைந்த சிறுவர்களை மீட்பதில் வெற்றிகண்ட அன்னை திரேசாவுக்கு அப்போது வயது 78.

எட்வீனா புறொக்கெல்ஸ்பை என்ற ஒரு பெண்மணி. திருமணமாகி குழந்தை - களை வளர்த்தார். தனது நண்பி மரதன் ஓடுவதைப் பார்த்து, தானும் பயிற்சியெடுக்க ஆரம்பித்தார். நீச்சலும் சயிக்கிள் ஓட்டமும் செய்தார். ட்ரைத்தலன் என்ற பிரபலமான மும்முனைப் போட்டியில் அவர் சம்பியனான போது அவருக்கு வயது 76.

முதியவர்களுக்கான ஓட்டப்போட்டியில் கலந்துகொண்டு முதல் பரிசுபெறுகின்ற நியூயோர்க் ஐடா கீலிங்கிற்கு வயது 104.

பஞ்சாப்பில் பிறந்த பவுசா சிங், இந்தியாவில் மட்டுமல்ல, லண்டன், ரொறன்ரோ, நியூ யோர்க் உட்பட ஐரொப்பாவிலும் மரதன் ஓடி வெற்றி பெற்றவர். ஹொங்கொ - ங்கில் அவர் இறுதியாக மரதன் ஓடி வெற்றிபெற்றபோது அவருக்கு வயது 101.

அதனால் உங்கள் அவசியமற்ற பயங்களையெல்லாம் தூக்கியெறியுங்கள். தற்செயலாக பிடிக்கா விட்டால், தற்செயலாக கோபித்து விட்டால், தற்செயலாக ஏசி விட்டால், தற்செயலாக கலைத்து விட்டால், தற்செயலாக வெறுத்து விட்டால், தற்செயலாக விழுந்து விட்டால், என்று எதற்கெடுத்தாலும், இந்த தற்செயலாக என்ற பயத்திலிருந்து வெளியே வாருங்கள்.

மீளவும் அந்தத் துணிவை மீட்டெடுங்கள். யார் உதவியையும் யாருடைய தயவையும் உதாசீனம் செய்யும் அவசியமில்லை. யாரையும் மனதளவில் கவலைப்படுத்தத் தேவையில்லை. ஆனால், யாருடைய தயவிற்காகவும் உங்களது சுயமரியாதையை, சுய கௌரவத்தை, உங்களது தன்மானத்தை, நீண்ட வரலாறு கொண்ட அந்தத் துணிகரமான வாழ்க்கைப் பாதையின் பக்கங்களை எதற்காகவும் விட்டுக் கொடுக்காதீர்கள்.



அ. முத்துலிங்கம்

# கந்தையா வாத்தியார்

மாமரத்தின் கீழ் வாத்தியார் முறுக்கு சாப்பிட்டுக் கொண்டிருந்தார். வீட்டில் சொல்லிச் செய்வித்த ஆறு சுற்று முறுக்கு அது. அவர் அண்ணாந்து கடித்து சாப்பிட்டபடியால் அதிலிருந்து தெறித்த துகள்கள் மறுபடியும் அவர் வாய்க்குள் விழுந்தன. வாத்தியார் அதை முடித்துவிட்டு மூக்குப்பொடி போட்டார். முறுக்கு மணத்தை தள்ளிவிட்டு மூக்குப்பொடி மணம் சூழ்ந்தது.

வாத்தியார் நாற்காலியில் அமர்ந்திருந்தார். நாங்கள் புற்தரையில் கைகளைக் கட்டி உட்கார்ந்திருந்தோம். கையை உதறிவிட்டு பாடத்தை ஆரம்பித்தார். அவருடைய பெயர் கந்தையா. நாங்கள் அதைச் சுருக்கி 'காணக் கண்கூசுதே, கந்தையா நாறுதே' என்று ரகசியப் பெயர் சூட்டியிருந்தோம். எங்கள் வகுப்பு கவிராயன் நல்ல கவிதையை மாற்றி அப்படி சுவரிலே எழுதிவிட்டான். வாத்தியார் நல்ல மனுசர். ரத்தம் வர அடிக்க மாட்டார்.

அன்றைய பாடத்தை அவர் ஆரம்பித்தார். மரத்தின் மேலேயிருந்த எருமை மேய்க்கும் பையனிடம் ஔவையார் சுட்ட பழம் கேட்ட கதைதான். அவன் கனிந்த பழத்தை மணலில் எறிந்தான். ஔவையார் அதை எடுத்து ஊதி ஊதிச் சாப்பிட்டார். 'பாட்டி, பழம் சுடுகிறதா?' ஔவையார் திடுக்கிட்டார். அவமானமாகி - விட்டது. அப்பொழுது அவர் பாடியது என்று வாத்தியார் பாடலைச் சொன்னார்.

> கருங்காலிக் கட்டைக்கு நாணாக் கோடாலி
>
> இருங்கதலித் தண்டுக்கு நாணும் _ பெருங்கானில்
>
> காரெருமை மேய்க்கின்ற காளைக்கு நான் தோற்றது
>
> ஈரிரவு துஞ்சாது என்கண்.

எங்கள் எல்லோருக்கும் வயது எட்டு, ஒன்பதுதான் இருக்கும். வாத்தியார் 'பொருள் தெரியுமோ' என்றார். முன்வரிசையில் உட்கார்ந்திருந்த வாகேஸ்வரி பட்டென்று கையை தூக்கினாள். இரண்டு சடைபோட்டு இறுதியில் இரண்டையும் ஒன்றாக்கி சிவப்பு ரிப்பன் கட்டியிருந்தாள். ஸ்டைல் ஒன்றும் இல்லை. அவளிடம் இருந்தது ஒரு ரிப்பன்தான். அவள் கையை தூக்கிவிட்டுத்தான் பதிலை யோசிப்பாள். வாத்தியார் விளக்கினார்.

'கருங்காலி மரத்தை வெட்டும் கோடாலி வெறும் வாழைத்தண்டை வெட்ட முடியாமல் தோற்கும். படிப்பறிவில்லாத எருமை மேய்க்கும் பையனிடம் நான் தோற்றுவிட்டேன். அவமானம். இரண்டுநாள் எனக்கு தூக்கம் வராது.' எனக்கு பாடல் பிடித்தது. ஒரு புலவர் தோல்வியை ஒப்புக் - கொண்டு பாடுவது எத்தனை அரிதானது. என் வாழ்நாள் முழுக்க அந்தப் பாடல் என்னைத் தொடர்ந்தது. எல்லாம் தெரியும் என்ற அகந்தை கூடாது. ஒருவருக்கு தெரியாத ஒன்று இன்னொருவருக்கு தெரியும். அதுதான் உலக மகா அற்புதம்.

நான் பெரியவன் ஆனதும் இன்னொரு கதை படித்தேன். இலியட், ஒடிசி போன்ற கிரேக்க காவியங்களை படைத்த ஹோமர் போனவழியில் ஒரு சிறுவனைச் சந்தித்தார். அவன் ஒரு விடுகதை போட்டான். 'நீ பிடித்தால் கொல்வாய், பிடிக்காவிட்டால் எடுத்துப் போவாய்.' எவ்வளவு யோசித்தும் ஹோமருக்கு விடை தெரியவில்லை. பையன் சொன்னான், 'பேன்' என்று. ஹோமரால் அவமானம் தாங்கமுடியவில்லை. தற்கொலை செய்துகொண்டார் என்று கதையுண்டு.

இத்தாலிய எழுத்தாளர் இட்டாலோ கால்வினோ Good for Nothing என்ற அருமையான சிறுகதை எழுதியிருக்கிறார். ஒருவனுக்கு சப்பாத்துக் கயிறு கட்டத் தெரியாது. எத்தனை முறை கட்டினாலும் அது அவிழ்ந்து போனது. அவனைச் சந்திக்கும் ஒரு மனிதன் சொல்வான். 'கவலையை விடு. எல்லோரு - க்கும் எல்லாம் தெரியும் என்றில்லை. ஒருவனுக்கு தச்சுவேலை தெரியும். ஒருவனுக்கு விதை விதைக்கத் தெரியும். இன்னொருவனுக்கு வாசிக்கத் தெரியும். சமுதாயம் செயல்படுவது ஒருவர் கையை ஒருவர் பிடித்து முன்னேறுவதால்தான்.'

ஒரு பழம் பாடல் உள்ளது. தூக்கணாங் குருவிக்கு கூடு கட்டத் தெரியும். மனிதனால் அது முடியாது. கறையான் புற்று எடுக்கும். எந்தப் பெரிய எஞ்சினியருக்கும் அது சாத்தியமில்லை. சிலந்தி வலை பின்னும். தேர்ந்த விஞ்ஞானிகூட அதை நகல் செய்ய ஏலாது. ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு வலிமை இருக்கும். பாடல் இப்படி முடியும். 'எல்லார்க்கும் ஒவ்வொன் றெளிது.'

தோமஸ் அல்வா எடிசன் ஆயிரத்துக்கு மேற்பட்ட காப்புரிமைகளுக்கு சொந்தக்காரர். மின்சார பல்பை கண்டுபிடித்தவர். அவர்தான் முதன்முதலாக நியுயோர்க் நகரத்து வீடுகளுக்கு மின்சாரம் வழங்கினார். அவர் டிசி மின்சாரம் விநியோகித்ததால் அவரால் மின்சார திட்டத்தை விரிவாக்க முடியவில்லை. ஏசி மின்சாரம் வழங்கும் கம்பனி இவரை முந்திக்கொண்டு போனது. 'நான் மின்சாரத்தை மிகக் குறைந்த விலையில் ஏழைகளுக்கு கொடுப்பேன். பணக்காரர்களுக்கு மட்டுமே மெழுகுவர்த்தி கட்டுபடியாகும்'. இப்படிச் சொன்ன பெரிய அறிவாளியான எடிசன் ஏசி மின்சாரத்தை எதிர்த்தார். இறுதியில் எடிசன் ஆரம்பித்த கம்பனியே அவரை வெளியே தள்ளியது. எல்லாமே தெரியும் என்ற இறுமாப்பு அவர் அறிவை மறைத்துவிட்டது.

கணிதமேதை ராமானுஜனால் இந்தியாவில் பி.ஏ பரீட்சை பாஸ் பண்ண முடிய - வில்லை. அத்வைத வேதாந்த நெறியைப் போதித்த ரமண மகரிஷி 17 வயதில் Wren and Martin இலக்கணப் புத்தகம் புரியாமல் வீசி எறிந்துவிட்டு திருவண்ணாமலை ஏகினார். 500 மில்லியன் ஆண்டுகள் முன்தோன்றிய கரப்பான் பூச்சி, தலையை கொய்தபிறகும் சிலநாள் உயிர்வாழும். தேனீக்களை ஒழித்தால் மனித இனம் நாலு வருடங்களில் அழிந்துபோகும். உலகத்து சிலந்திகள் முடிவெடுத்தால் ஒருவருடத்தில் அவை மனித இனத்தை தின்று தீர்த்துவிடும்.

ஒவ்வொரு புதுத்தகவலின் போதும் நான் இன்றும் கந்தையா வாத்தியாரை நினைக்கிறேன். ஆதியிலிருந்து வல்லமைகள் பகிர்ந்து அளிக்கப்பட்டிருக்கின்றன. 'நீ பெரிது, நான் பெரிது' என்றில்லை. ஒவ்வொருவர்க்கும் ஒவ்வொன்று எளிது.

# தமிழ் மரபுத் திங்கள் தொடக்க விழாக்கள்

தமிழ் மரபுத் திங்கள் 2023ன் தொடக்க விழாக்கள் கடந்த மாதம் 7ம் திகதி சனிக்கிழமை ஸ்காபரோவிலும் மார்க்கத்திலும் இடம்பெற்றன. ஸ்காபரோ சிவிக் சென்ரர் மண்டபத்தில் கனடா தமிழ் மரபியல் நடுவமும், மார்க்கம் ஆனின் சமூக மண்டபத்தில் தமிழர் குடிசார் அமைப்பும் (Tamil Civic Action) விழாக்களை ஏற்பாடு செய்திருந்தன. கனடாவின் மத்திய அரசு, ஒன்ராறியோ மாகாண அரசு மற்றும் நகர சபைகளின் பிரதிநிதிகள் இவ்விழாக்களில் பங்கேற்று உரையாற்றி சிறப்பித்தனர். இளையோரின் கலை நிகழ்ச்சிகள் இவ்விழாக்களை அலங்கரித்தன. இரு விழாக்களினதும் ஒளிப்படங்கள் சில இப்பக்கத்தில் இடம்பெறுகின்றன.

## ஸ்காபரோ விழா










## மார்க்கம் விழா










# தொழில் முனைவர் தேவதாஸ் சண்முகலிங்கம் தலைமையில் தென்மராட்சி சேவை நிறுவன சர்வதேச ஒன்றியம்







கனடாவில் இயங்கி வரும் தென்மராட்சி சேவை நிறுவனத்தின் புத்தாண்டுக்கூடல், அதன் தலைவரான தேவதாஸ் சண்முக - லிங்கம் அவர்களை 'தென்மராட்சி சேவை நிறுவன சர்வதேச ஒன்றிய'த்தின் தலைவராக அறிமுகம் செய்யும் நிகழ்வாக கடந்த மாதம் 2ம் திகதி ஸ்காபரோ கோதாவரி உணவகத்தில் இடம்பெற்றது. ஆஸ்திரேலியாவில் இயங்கும் தென்மராட்சி சேவை நிறுவனத்தின் முக்கியஸ்தர்களில் ஒருவரான திரு நடராஜா கருணாகரன் சிறப்பு விருந்தினராக கலந்து உரையாற்றினார். கனடிய நிறுவனத்தின் பிரமுகர்களான திரு. எஸ். துரைராஜா, கலைஞர் வி. திவ்யராஜன், 'தமிழன் வழிகாட்டி' செந்தி ஆகியோர் உரையாற்றியதுடன் அவர்கள் பணிக்காக மதிப்பளிக்கப்பட்டனர். தென்மராட்சியில் வறுமைக்கோட்டுக்குக் கீழ் கல்வி பயிலும் சுமார் 70 மாணவர்களுக்கு மேற்படி கனடிய அமைப்பு நிதியுதவி வழங்கி வருவதையும், இவர்களுள் 42 பேர் பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி பெற்றிருப்பதையும் தலைவர் திரு. தேவதாஸ் தமது உரையில் குறிப்பிட்டார். இங்குள்ள சோழநிலா என்ற கிராமத்தை தலைவர் தேவதாஸ் பொறுப்பெடுத்து தமது சொந்த நிதியில் அதன் மேம்பாட்டை மேற்கொண்டு வருவதை நிகழ்ச்சியை நெறிப்படுத்திய திரு. சத்தியசீலன் தமதுரையில் குறிப்பிட்டார். இந்நிகழ்வில் பங்கேற்ற இலங்கை முன்னாள் வர்த்தக சங்கத்தினர், அதன் தலைவர் திரு. கேதா நடராஜா தலைமையில் மற்றைய நண்பர்களையும் இணைத்து மேற்படி நிறுவனத்தின் கல்விப் பணிக்காக ஆயிரம் டாலர்களை கையளித்தனர். கனடிய நிறுவனத்தின் புதிய தலைவராக திரு. சௌந்தரம் அறிமுகம் செய்யப்பட்டார். கனடிய கலைஞர்களின் இசை நிகழ்ச்சியுடன் இரவு விருந்தும் இடம்பெற்றது.










ப. ஸ்ரீஸ்கந்தன்

## ஞாபகம் துளிர்க்கிறதே ! 22

## மண்ணின் மகத்துவங்கள்

இலங்கையில் நுவரெலியாப் பகுதியில் சீதா எலியா என்ற ஓர் இடம் இருக்கிறது. அங்கு சீதையை இராவணன் மறைத்து வைத்திருந்ததாகச் சொல்லப்படுகிறது. வடக்கிலிருந்து சென்றால் ரம்பொடை என்ற இடத்தைக் கடக்க வேண்டும். அங்குள்ள மலையொன்றில் மிக உயரமான ஆஞ்சனேயர் சிலையுள்ள கோயில் உள்ளது. அங்கிருந்து சிறிது நேர பிரயாணத்தில் சீதா கோயில் உள்ள சீதா எலியா என்ற இடத்தை அடையலாம்.

இராவணன் மீதுள்ள ஈர்ப்புக் காரணமாக அப்பகுதியில் இரு நாட்கள் தங்கியிருந்தேன். சீதா கோயிலுக்கு முன்பாகவுள்ள பெருமலையிலேயே இராவணனின் படைகள் நின்றுள்ளன. சீதையை தேடி வந்த அனுமான் கால் பதித்த இடம் ரம்பொடை மலை. அந்த மலையில்தான் வானரப் படைகள் நிலைகொண்டிருந்தன.

இவ்விரு மலைகளுக்கிடையே மகாவலி ஆறு பாய்கிறது. ரம்பொடை ஆஞ்சனேயர் கோயிலைத் தாண்டி மேலே செல்லும்போது மரங்கள் பச்சை நிறமாக இல்லாது கறுப்பாக இருக்கும் பகுதியைப் பார்க்க முடியும்.

இரு படைகளுக்கும் யுத்தம் நடந்த இடமாக இப்பகுதி கருதப்படுகிறது. இன்றும் சில குறிப்பிட்ட நாட்களில் யுத்தச் சத்தங்களும், அழுகுரல்களும், புயல் வீசும் சத்தங்களும் கேட்பதாக ஊரவர்கள் சொல்கிறார்கள்.

இவ்வாறான மகத்துவமிக்க கதைகள் எம் மண்ணுக்கு நிறைய உண்டு. கண்ணகி வழிபாடு ஒரு காலத்தில் முக்கியமான தெய்வ வழிபாடாக இலங்கை பூராவும் இருந்துள்ளது. குறிப்பாக பெரும்பாலான சிங்கள இனத்தவர் இதனை முன்னெடுத்துச் சென்றிருந்தனர்.

சிங்கள அரசி ஒருவர் கேட்டதற்கு இணங்க இராஜராஜ சோழன் பத்தினி தெய்வ வழிபாட்டுக்காக கண்ணகி ஆலயமொன்றை அமைத்துக் கொடுத்ததாக கதை உண்டு. இன்று சிங்கள மக்கள் மத்தியில் கண்ணகி வழிபாடு அரிதாகிவிட்டது.

வடபகுதியில் முல்லைத்தீவிலுள்ள வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோயில் பிரசித்தமானது. அதன் அருகிலுள்ள ஊற்றிலிருந்து எடுக்கப்படும் நீரிலேயே கோயில் விளக்கு எரிகின்ற அற்புதம் தொடர்ந்து நடக்கிறது. புங்குடுதீவு, கச்சாய், பூநகரியிலுள்ள நல்லூர் ஆகிய இடங்களில் கண்ணகி கோயில்கள் உண்டு.

பருத்தித்துறை பகுதியில் சிறு கொட்டிலால் அமைந்த கோயில்களில் கண்ணகி வழிபாடு நடைபெறுவதை பார்த்திருக்கிறேன். ஓரிரு கோயில்களில் ஒரு மூலையில் கண்ணகி சிலை இருப்பதையும் கண்டுள்ளேன்.

விசாரித்ததில் வடபகுதியில் கண்ணகி வழிவாடு அமோகமாக நடந்ததற்கான சாத்தியங்கள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

நாவலரின் எழுச்சியின்போது கண்ணகி கோயில்கள் அம்பிகை கோயில்களாக மாற்றப்பட்டுள்ளன.

ஆனால், மட்டக்களப்புப் பகுதியெங்கும் கண்ணகி கோயில்கள் நிறைந்து காணப்படுகின்றன. அம்பாறைப் பகுதியில் பெருமளவில் இக்கோயில்கள் உள்ளன. இக்கோயில்களில் படிக்கப்படும் வழக்குரை காதை பிரசித்தமானது. குறித்த நாட்களில் மட்டக்களப்பு காடுகளில் கண்ணகியின் சலங்கைச் சத்தங்கள் கேட்பதாக வரலாற்றுக் குறிப்புகள் உள்ளன.

எங்கள் ஊருக்குப் பக்கத்திலுள்ள கொழும்புத்துறையில் யோகர் சுவாமிகள் என்ற சித்தர் இருந்தார். அப்பா அடிக்கடி அவரைச் சென்று சந்தித்ததாக சொல்லுவார். ஒருமுறை ஓலைப்பையில் தோடம்பழங்களைக் கொண்டு சென்றுள்ளார். யோகர் சுவாமிகள் அப்பாவை வாசலிலேயே நிற்பாட்டி “உந்தத் தோடம்பழங்களை பிள்ளைகளுக்குக் குடு” என்றாராம் பையைத் திறந்து பார்க்காமலே. அப்பா அந்தக் கதையை எமக்குச் சொல்லி மெய்சிலிர்ப்பார்.

சுவாமிகள் ஒரே நேரத்தில் இரண்டு இடங்களில் இருந்ததாகவும் கதைகள் உள்ளன. வாழ்க்கையின் பெரும் தத்துவத்தை ‘எப்பவோ முடிந்த காரியம்’ என மூன்று சொற்களில் சொல்லிய சித்தர் யோகர் சுவாமிகள்.

எங்கள் ஊரில் இராமலிங்கம் என்றொரு ஆசிரியர் இருந்தார். குறி சொல்பவர். தொலைந்த மாட்டின் கவலையோடு குலம் மாமா அவரிடம் போனார்.

மாமா ஒன்றும் சொல்லவில்லை. “மாடைத் தேடி வந்திருக்கிறாய்.... அந்த இடத்தில் நிற்குது” என்றார் இராமலிங்கம். அவர் சொன்ன இடத்தில் மாடு நின்றது.

இன்றும் இவ்வாறு மகத்துவம் மிக்க மனிதர்கள் எமது மண்ணில் வாழ்கிறார்கள். சில வருடங்களுக்கு முன்னர் நண்பர் ஒருவர் வடமராட்சியிலுள்ள ஓர் அர்ச்சகரிடம் என்னை அழைத்துச் சென்றார்.

ஆஞ்சனேயர் வாலாயம் பெற்ற அவர் “.... ஒரு நீரோடையைக் கடந்து போகிற கோயில். வடக்குப் பார்த்த அம்மன்... ஒவ்வொரு வருடமும் அபிசேகம் செய்யிறனீங்கள் - கடைசி பதினொரு வருசம் செய்யவில்லை. போய் செய்யுங்கோ” என்றார். எனக்கு உடல் நடுங்கி வியர்வை கொட்டியது. சொன்னது சரியாக இருந்தது.

எமது மண்ணுக்கு நிறைய மகத்துவங்கள் இருக்கின்றன.

நாங்கள் தான் அவற்றை மதிப்பதில்லை.

# சர்வதேச புகழ் எழுத்தாளர் ‘அ. முத்துலிங்கம் விருது’ தமிழ்நாட்டில் மொழிபெயர்ப்பு நூலுக்கு வழங்கப்பெற்றது



கடந்த அறுபது ஆண்டுகளுக்கும் மேலாக தமிழியல்துறையில் புகழ்பெற்றுத் துலங்கும் கனடாவாழ் எழுத்தாளர் அ. முத்துலிங்கம் பெயரில் புதிய விருதொன்று தமிழ்நாட்டில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. தமிழ் மொழியிலான இலக்கியப் படைப்புகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து நூலாக்கி சர்வதேசமும் எடுத்துச் செல்லும் பணியை ஊக்குவிக்கும் முகமாக ‘அ.முத்துலிங்கம் விருது’ ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு கோவை விஜயா வாசகர் வட்டம் ஏற்பாட்டிலான முதலாவது விருது வழங்கும் விழா கடந்த மாதம் 19ம் திகதி கோயம்புத்துார் பி.எஸ்.ஜி. கல்லுாரி அரங்கில் இடம்பெற்றது. தினமணி பத்திரிகையின் ஆசிரியர் திரு.கே.வைத்தியநாதன் விருது வழங்கும் தலைமை உரையை நிகழ்த்தியதோடு, பிரியம்வதா இராஜ்குமாருக்கு ‘அ. முத்துலிங்கம் விருதை’ கையளித்தார். எழுத்தாளர் ஜெயமோகனின் ‘அறம்’ என்ற சிறுகதைத் தொகுதியை TRUE என்ற தலைப்பில் மொழிபெயர்த்தமைக்காக பிரியம்வதாவுக்கு இந்த விருது வழங்கப்பட்டது. இணைப் பேராசிரியர் கலாநிதி ஆர். இந்திராணி, வங்காள எழுத்தாளர் அனிதா அக்னிஹோத்ரி, தெலுங்கு எழுத்தாளர் கீதா குமாரசாமி, கலாநிதி சசித்ரா தாமோதரன், விஜயா எம். வேலாயுதம் ஆகியோர் நிகழ்வில் உரையாற்றினர். பல மொழிகளைக் கற்றுத் தேர்ந்து அந்த மொழிகளில் தமிழ் படைப்புகள் வெளிவர வேண்டுமென்றும், பன்மொழிப் புலமைதான் தமிழை வளர்க்குமென்றும் தினமணி ஆசிரியர் வைத்தியநாதன் தமதுரையில் குறிப்பிட்டார். எழுத்தாளர் அ. முத்துலிங்கம் அவர்களுக்கு சமர்ப்பணமாக இசை வழியாக பாராட்டு வழங்கிய நிகழ்வு சிறப்பு அம்சமாக விழாவில் இடம்பெற்றது.




















# பத்து மணித்தியாலங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்ற ‘விமலின்’ அனலை எக்ஸ்பிரஸ் பத்தாவது ஆண்டு ‘பாரம்பரியம்’

உலகளாவிய ரீதியில் தமிழர்களை இணைத்து வரும் முன்னணி சமூக ஊடகமான அனலை எக்ஸ்பிரஸின் பத்தாவது ஆண்டுப் பூர்த்தியை ஒட்டிய ‘பாரம்பரியம்’ மாலைப்பொழுது கடந்த மாதம் 7ம் திகதி ஸ்காபரோ சீன கலாசார மண்டபத்தில் நிறைந்திருந்த ரசிகர்கள் மத்தியில் வெகு சிறப்பாக இடம்பெற்றது. தமிழ் மரபுத் திங்கள் கொண்டாடப்படும் ஜனவரி மாதத்தில் அதன் உட்கருத்தை வெளிப்படுத்தும் வகையில் விழாவுக்கு ‘பாரம்பரியம்’ மகுடம் சூட்டியது பலரதும் பாராட்டைப் பெற்றது. தமிழர்தம் கலை, கலாசாரம், பண்பாடு, ஆன்மிகம் ஆகிய செயற்பாடுகளை அனைத்து நாடுகளிலும் வாழ்ந்து வருபவர்கள் கண்டுகளிக்க வேண்டுமென்ற தூரநோக்குடன் விமலதாஸ் (விமல்) தவராசாவினால் ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வருவது அனலை எக்ஸ்பிரஸ். பாரம்பரிய நிகழ்வுகளை அரங்கத்தில் பத்து மணித்தியாலங்கள் நேர்த்தியாக நடத்திய விமலும் அவரது குழுவினரும் பெருவரவேற்பைப் பெற்றனர். நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கிய றஞ்சித் மற்றும் அபிஷேகாவும் விழாவுக்கு மெருகூட்டினர். கனடிய கன்சர்வேடிவ் கட்சித் தலைவர் பியர் பொலிவியர் பிரதம விருந்தினராக விழாவில் பங்கேற்று சிறப்புரையாற்றினார்.













MEDCENTRE HEALTH
SYNCHRONIZING HEALTH SECTORS

medcentrehealth.com

# Serving our community for more than 10 years!

## Urgent Care / Walk-In Clinic - Primary Care - Dermatological Care - Women's Care



Our Founder & CEO Dr. Senthill Mohan, doctors and staff with Hon. Paul Calandra, the Minister of Long-Term Care & MPPs Hon. Logan Kanapathy (Markham-Thornhill) & Hon. Vijay Thanigasalam (Scarborough- Rouge Park) at the MEDCENTRE HEALTH 10th ANNIVERSARY celebration (4 doctors couldn't attend).

## Markham McNicoll Women's Health Clinic (MMWHC)

Women doctor & staff will address the issues or concerns of women with extreme confidentiality in a women-friendly environment. Started in July 2022

Pap Test, STD tests & treatment, Contraception consultation, IUD insertion & removal, Yeast infection treatment etc.

* Any patient can consult without any referral. *Referral accepted from any doctor.

* Clinic on Thursdays now. Soon on Mondays as well.

* Health card (OHIP) accepted. Call: (416) 331-8888 on weekdays. Fax: (416)331-8089

## Markham McNicoll Dermatology Clinic (MMDC)

*Our Dermatologist (Skin Specialist) treats all aspect of dermatology. His interests include skin cancers and pigmented lesions. Started in July 2020

* Referral accepted from any doctor (Family doctor, Walk-In doctor, or specialist doctor)

* Clinic on Tuesdays & Fridays now. Closed on Weekends & Statutory holidays.

* Health card (OHIP) accepted. Call: (416) 331-8888 on weekdays. Fax: (416) 331-8889.

## Markham McNicoll Family Care Clinic (MMFCC)

* Closed on Sundays & Statutory holidays.

* See our website medcentrehealth.com to book an appointment.

* Health card (OHIP) accepted. Tel: (416) 292-6666 Fax: (416) 292-7770.

## Markham McNicoll Urgent Care Clinic (MMUCC)

* Opens all 365 days. Any time change will be updated daily in our Google page.

* See our website medcentrehealth.com to book an appointment.

* Minimal wait time for booked appointments. Walk-In also accepted.

* Health card (OHIP) accepted. Tel: (416) 609-3333 Fax: (416) 609-3334.

**2901 Markham Road (Markham & NcNicoll intersection), Toronto, ON M1X 0B6**


தமிழீழத்தின் இசை வேந்தன்
வர்ண.ராமேஸ்வரன் நினைவரங்கத்தில்
உங்கள் அபிமான
ஈழநாடு
பத்திரிகையின்
30வது ஆண்டு விழா
இசைச் சங்கமம் 2023
தமிழக - கனடிய பிரபல பக்கவாத்தியக் கலைஞர்களுடன்
கலைமாமணி
ராஜேஸ் வைத்தியா
APRIL 23, 2023
6:00PM
CHINESE CULTURAL CENTRE
5183 SHEPPARD AVE. EAST
SCARBOROUGH
அன்பளிப்பு
VVIP $200
VIP $100
$50
தொடர்புகட்கு: ஈழநாடு பரமேஸ் 416-841-9600


உங்களிடம் ..
செலுத்தப்பட வேண்டிய கடன் இருக்கிறதா?
உங்களுக்கோர் மகிழ்ச்சியான செய்தி!
வணிக உரிமையாளர்களும் சுயதொழில் செய்வோரும்
வருமான மதிப்பீடுகள் இல்லாமல் மாதந்தோறும் $5000 வரை
அங்கவீனக் காப்பீட்டுத் தொகையைப் பெற முடியும்.
அஜித் சபாரட்ணம்
647-401-5800 | 416-439-2800
10 Thornmount Dr, Scarborough, ON M1B 3J4.

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community

## OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.



### *At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

*• Vistation • Funeral & Memorial Service*
*• Reception • Burial • Cremation*

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை





**Christeen Seevaratnam**
416-258-6759

**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826



இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

### *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**

- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**


- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1
www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

*A caring part of our community*


AGA
Beauty Skin SPA & Tranning Center
15, Karachi Drive, Unit 5, Markham
On L3S0B5
Body & Face Cream On Sale
Call : 647-716-5252
Defining Beauty with style
Beauty Services
Threading
Waxing
Facial
Hair Cutting
Hair Colouring
Hair Care
Protein Treatment Head
Weight Loss program
bridal
Makeup & Hair style
Henna Designs
Eye Lash Extensions
Skin Tag Removal
Microdermabrasion
Certificate Courses
Hair Styles
Makeup
Bridal
Esthetician Courses
Threading
Waxing
Facial
Hair Care
Hair Colouring
Protein Treatment Head
Eye Lash Extensions
Skin Treatment
Microdermobrasion
Chin Lifting
Saree Wrapping
Saree Blouse Making
ARAJEN BEAUTY & SKIN CARE
2607 Englinton ave east, Unit 4,6,7,
Scarbarough, On M1K2S2


JRB GROUP CORPORATION
Loans, Mortgages, Insurance, Visa,
Real Estate, Master Card, Credit Counselling
Best rate Mortgage Arranged
Almost All Services Available
Business Loans 25K to 500,00
புதிதாக ஆரம்பிக்கப்பட்ட அல்லது ஆரம்பிக்கப்படவுள்ள
சகல வர்த்தகர்களுக்குமான சிறப்பான சேவை!
FINANCE
R. R. Rajkumar B. Com (Hons), MBA
647–289–6164 / 416–655–5577


Build Your Dream Home
SABESAN'S CHOICE
We build 10,000sq. feet (minimum) warehouse from 139.00 per sq.feet.
400 Kilometre per hour Wind resistance.
Termite Proof
Compare traditional Building Energy Savings.
Mould Proof
Sound Resistence
Roof Top Greenhome
உங்கள் வீட்டுடன் இணைந்ததாக மேலதிக இருப்பிட வசதியை ஏற்படுத்த விரும்புகிறீர்களா?
எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள் !
Sabesan
விருது பெற்ற தொழிற்றுறை நிபுணர்
416.605.1990
kgsabesan@hotmail.com


KEV TAX
KNOWLEDGE & EXPERIENCE IS VITAL
www.kevtax.com
* CORPORATE INCOME TAX
* BOOKKEEPING & ACCOUNTING SERVICES
* PERSONAL INCOME TAXES
* QUALITY SERVICE WITH REASONABLE FEES
* FREE YEAR-ROUND CUSTOMER SERVICE
* CORPORATE AND SOLE PROPRIETORSHIP BUSINESS REGISTRATION
SENIORS / WELFARE RECIPIENTS
ALL RETURNS INCLUDE EFILE SERVICE
FREE EFILE SERVICE
Ganthiy Selvarajah
(B.A. Sri Lanka)
TEL: 416.841.1866
FAX: 1.888.841.8829
kevtax.ganthiy@gmail.com


Just Sold!
RAVE
Another SOLD
$ 206,000
Over Asking Price
18 Brackenridge St.
Ajax, Ontario
Rossland & Salem
- Contact us for a Free Home Evaluation! (no obligation)
- For personalized Tour & Other Property Information Call Us today!
- Free home staging
Before you list Call me
You can see the Difference
Highest price in the same street
P.Raveenthiran
Real Estate Broker
HomeLife/Future Realty Inc.,Brokerage
205-7 Eastvale Dr,Markham ON. L3S 4N8
Bus: 905.201.9977 | Fax: 905.201.9229
HOMELIFE
HIGHER STANDARDS
416-567-2462
realtor.rave@gmail.com


Financial Services
42 YEARS IN BUSINESS
KASI
THIRU
M. KASIPPILLAI & SONS INC.
3228 Eglinton Ave. E., Suite #3, Scarborough, Ont. M1J 2H6
Tel.: (416) 267-8221 Fax: (416) 267-0620


ABBIRAMI
CATERING AND TAKE OUT SERVICE
அபிராமியின்
வாழையிலை
விருந்து
Tel: (416) 266-5372
2619 Eglinton Ave. East,
Scarborough, Ont M1K 2S2
(Between Brimly & Midland)


Veerar Takeout & Catering
416-299-4541
647-293-6634
5790 Sheppard Ave East, #3, Scarborough, ON M1B 5J6


Babu Florist Ltd.
6055 Steeles Ave, Unit C114, Scarborough, Ontario. M1X 0A7
Temple, Wedding, Funeral & Others
Indian Malai & Jasmine Flowers Available
Call : M.Babu
416-754-8282
www.babuflorist.com
Email : info@babuflorist.com


BAYVIEW HOMES DESIGN LTD.
Dream Becomes Reality
Building Permits
Minor Veriance
Lot Severance
Legal Basement
Project Management
Kathir
416 856 6900
Subramaniam
Kathirgamanathan P.Eng.
BCIN 45205
email: kathirhomes@gmail.coml


சிவஸ்ரீ
சிவ. ஜனார்த்தன
குருக்கள்
647-449-6542
aarthananyathu@gmail.com
aarthanan@hotmail.com


KANAGAAMBIKAI
GOLD HOUSE
We Sell
Singapore Jewellery
Finest Quality 22K Gold
Diamonds/ Birth Stones/ Jewellery/ Watches
We Provide
Jewellery Repairs
Gold Items
3160 EGLINTON AVE,E.,UNIT #3,
SCARBOROUGH,ON M1J 2H4
Tel:416-269-7197


8 Shadlock St Unit #6,
Markham, ON L3S 3K9
Tel : 416-321-7552
INDRAN SWEET
& Ice Cream



வேதநாயகம் தபேந்திரன்

# சுருட்டுக் கைத்தொழிலும் வாசிப்புப் பண்பாடும்

யாழ்ப்பாணத்தை அடையாளப்படுத்தும் தனித்துவமான கைத்தொழில்களில் ஒன்றாக சுருட்டு சுற்றும் கைத்தொழிலும் இருந்துள்ளது. புகையிலைப் பயிரைத் திறம்படச் செய்கை பண்ணும் நிபுணத்துவம் வாய்ந்தவர்களாக அன்றும் இன்றும் யாழ்ப்பாண விவசாயிகள் இருக்கின்றனர்.

பதப்படுத்திய புகையிலையைக் கொண்டு சுற்றப்படும் சுருட்டு கைத்தொழில் இம் மண்ணில் பேர் பெற்றதாக விளங்கியது. யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல கொழும்பு நகரிலும் சுருட்டுச் சுற்றும் கைத்தொழில் முதன்மை பெற்ற ஒரு காலம் இருந்தது.

யாழ்ப்பாணத் திருநெல்வேலியில் இருக்கும் இன்றைய யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் அன்று பரமேஸ்வராக் கல்லூரியாகக் கல்வியில் கோலோச்சித் திகழ்ந்தது. அக் காலத்தில் பரமேஸ்வராக் கல்லூரியின் சுற்றாடல் மண் குடிசைகள் பல இருந்த ஒரு கிராமமாக விளங்கியது.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் செம்புலக் கிராமங்கள் பலவற்றின் வாழ்வாதாரத்தில் சுருட்டுச் சுற்றும் கைத்தொழில் பிரதான பாகத்தை வகித்தது. சுருட்டுச் சுற்றும் கைத்தொழில் யாழ்ப்பாண வாழ்வியலின் வாசிப்புப் பண்பாட்டிலும் பெரும் அடித் தளத்தை ஏற்படுத்தியது.

இது மறந்த கதையாகவும் மறைக்கப்பட்ட கதையாகவும் போகாமல் இருக்க மூத்தோர்களின் அனுபவ ஞாபக மூட்டலைப் பெற்று இங்கே பதிவு செய்துள்ளேன். சுருட்டுக் கொட்டில்கள் எனப்பட்ட இக் கைத்தொழிற்சாலைகள் நல்லூர், வலிகாமப் பிரதேசத்தில் அதிகமாகவும் வடமராட்சி, தீவகப் பிரதேசத்தில் சிறிதளவாகவும் இருந்தன. சுருட்டுச் சுற்றும் தொழிலாளர்கள் ஒரு நாள் முழுவதும் நிலத்தில் இருந்தவாறே வேலை செய்வார்கள். வேலை அலுப்பைப் போக்கவும்,பொழுதைப் போக்கவும் ஏதாவது ஒரு முறை வேண்டுமல்லவா?

இப்போதையதைப் போல அப்போது இலத்திரனியல் ஆட்சி யுகம் இல்லை. விஞ்ஞான வளர்ச்சி இயந்திர சாதனங்களுடன் மட்டும் இருந்தது. அதனால் சுருட்டுச் சுற்றும் தொழிலாளரது பொழுதுபோக்குத் தேவைகளைப் பயனுள்ளதாகக் கழிக்க பத்திரிகை வாசிப்பு என்ற ஒரு முறையைக் கைக்கொண்டார்கள். அக்காலத்தில் கொழும்புக் கோட்டையிலிருந்து புறப்படும் தபால் புகையிரதம் (மெயில் ரயில்) காலை 6.05 மணிக்கு யாழ்ப்பாணத்தை வந்தடையும்.

அந்த மெயில் ரயில் வீரகேசரி, தினகரன், தினபதி என அக்காலத்துத் தமிழ் பத்திரிகைகளைக் காவியவாறு வடக்கு நோக்கி வரும். ஆங்கில, சிங்களப் பத்திரிகைகளும் இந்த மெயில் ரயிலில் வரும். விடிகாலையில் குடாநாட்டின் அனைத்து மாவட்டங்களுக்கும் தினப் பத்திரிகைகள் செய்திகளைத் தாங்கி வந்துவிடும். தமிழ் பத்திரிகைகளும் எமது சுருட்டுக் கொட்டிலுகளுக்குள் வந்து விடும். பத்திரிகைகள் வாசிக்கத் தமிழ் அறிவு, கல்வி, கேள்விகளில் சிறந்த ஒருவரை அத்தொழிலாளர்கள் ஒன்று கூடி நியமித்திருப்பார்கள்.

அவர் காலை 9 மணியளவில் சைவ ஆசாரமாக உடையணிந்து இறைவழிபாட்டில் ஈடுபட்டு நெற்றியில் விபூதிப் பூச்சுடன் பளிச்சென்ற தோற்றத்துடன் வருவார். அன்றைய தினப் பத்திரிகைகளை எடுத்து வாசிக்க ஆரம்பிப்பார். முதலில் தலைப்புச் செய்திகளை வாசித்து அதன் உள்ளடக்கங்களைக் கூறுவார்.பத்திரிகையின் பக்கங்களின் செய்திகளை வாசித்து அவை ஒவ்வொன்றுக்கும் பொருள் கூறி விளக்கமளிப்பார்.

பத்திரிகையின் தொடக்கப் பக்கத்திலிருந்து இறுதிப் பக்கம் வரையும் விளம்பரம் உட்பட ஒரு செய்தியையும் விடாமல் வாசிப்பார்கள். அதனால் தான் இன்றும் பத்திரிகை முழுவதையும் வாசிக்கும் ஒருவரைப் பார்த்து “என்ன சுருட்டுக் கொட்டில் வாசிப்புப் போல வாசிக்கிறியள்” என நகைச்சுவையாகக் கூறுவார்கள். எழுத வாசிக்கத் தெரியாத படிப்பறிவு குறைந்த அத்தொழிலாளர்கள் செய்திகள் ஒவ்வொன்றினதும் கருத்துகளை மிகவும் ஆவலுடன் கேட்பார்கள்.

அக்காலத்தில் பிரபலமான வழக்குகள், சம்பவங்களின் கோர்வைகள் குறும்படம் போல உணர்ச்சி ததும்ப வாசிக்கப்படும். கூடியிருக்கும் தொழிலாளர்களால் விவாதிக்கப்படும். தமிழ், சமயம், பூகோளம், உலக அரசியல், சினிமா, விளையாட்டு எனப் பல விடயங்களும் அங்கு விவாதிக்கப்படும். இதனால் கேள்வி ஞானத்தால் அத்தொழிலாளர்களின் அறிவு வளம்பெற்றது.

பத்திரிகைகள் கூறிய நற்பண்புகளை, அறப் பண்புகளை உள்வாங்கினார்கள். மனித விழுமியப் பண்புகளை வளர்த்தார்கள். தமது வாழ்க்கையிலும் அவற்றைக் கடைப்பிடித்தார்கள். தமது பிள்ளைகளையும் அவ்வழியில் வழிப்படுத்தினார்கள். சிறந்த சமூகப் பிரசைகளாக்கினார்கள். கல்வியின் அருமையைத் தெரிந்து கொண்டார்கள். தமது பிள்ளைகளுக்கும் கல்வி கற்றுக் கொடுப்பதில் ஆர்வம் காட்டினார்கள். வாசிப்பைக் கேட்டு கல்வி, கேள்வி ஞானங்களால் அறிவு பெற்றார்கள்.

அறப்பண்புகள் உள்ள அவர்கள் வீதியில் ஒரு பொருள் கிடந்தால்கூட அதைத் தமக்கெனச் சொந்தமாகக் கொள்ளாது உரியவரைத் தேடிக் கண்டுபிடித்துக் கொடுத்தார்கள். இவ்வளவும் ஒரு சுருட்டுக் கொட்டில் வாசிப்பின் ஊடாகப் பெற்றவையாக வெளிப்பட்டன.

அத்துடன் அவர்கள் நிற்கவில்லை. தமது ஊர்களில் கிடுகுக் கொட்டில்களால் சனசமூக நிலையத்தை அமைத்தார்கள். சனசமூக நிலையமென்ற இவ் அமைப்பைக் கோயில்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், விளையாட்டுக் கழகங்கள், சமூக ஆர்வலர்கள் எனப் பல தரப்பட்டோரும் நிறுவினார்கள். யாழ்ப்பாணச் சமூகத்திற்கே தனித்துவமான சாதி அமைப்பை இச் சனசமூக நிலையம் எனும் சமூக அடிப்படை அமைப்பு இனம் காட்டியது. கிராமத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட சனசமூக நிலையங்கள் இருப்பின் அங்கு பலதரப்பட்ட சாதி மக்கள் குடியிருப்பதாகவே பொருள் கொள்ள முடியும்.

எமது சுருட்டுத் தொழிலாளர்கள் உருவாக்கிய சனசமூக நிலையங்களின் பக்கம் மீண்டும் வருவோம். தாம் சுருட்டுச் சுற்றிக் கூலியாகப் பெறும் பணத்தில் சிறுபகுதியைத் தமது அறிவுக் கண்ணைத் திறக்க உதவிய பத்திரிகை வாசிப்பவருக்குக் கட்டும் சுருட்டுகளின் எண்ணிக்கைக்கேற்பக் கொடுத்தனர்.

(30ம் பக்கம் வருக)

# இலக்கியத் தோட்ட இந்த வருட விருதாளர்கள்

கனடாத் தமிழ் இலக்கியத் தோட்ட இவ்வருட விருது விழா யூன் மாதம் 4ம் திகதி இடம்பெறவுள்ளது. இயல் விருது பெறும் லட்சுமணன் முருகபூபதி (ஆஸ்திரேலியா), பாவண்ணன் (இந்தியா) ஆகியோரின் பெயர்கள் ஏற்கனவே அறிவிக்கப்-பட்டது. மற்றைய ஐந்து விருதுகள் பெறுபவர்களின் பெயர் விபரம் கடந்த மாதம் வெளியானது. புனைவு விருதுக்கு வேல்முருகன் இளங்கோவும், அபுனைவு விருதுக்கு சாம்ராஜூவும், கவிதை விருதுக்கு சுகிர்தராணியும், இலக்கிய சாதனை விருதுக்கு வ.ந. கிரிதரனும், இலக்கிய ஆய்வு மற்றும் மொழிபெயர்ப்புக்கு சிவசங்கரியும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

# Low-income seniors in Ontario To get small boost this year !

Low income seniors in Ontario will get a small boost this year because the province is doubling payments under itsGuaranteed Annual Income System.

The increase in GAINS payments for all recipients is welcome but "long overdue," according to Diana Cable, director of policy and research for CanAge, a national seniors' advocacy organization.

Cable said the doubling, which runs for 12 months until December 2023, will make a difference to seniors who qualify for the payments.

"They are living right now with unprecedented challenges. Those on a fixed income just can't afford to keep up with inflation right now," Cable told CBC Toronto on Monday.

"They are making choices that are heartbreaking. They are making choices between things like food, heating and medications. And nobody should ever be in the position of having to decide to do an either or in those kinds of circumstances."

According to the province, the increase means the maximum GAINS payment will rise to $166 a month for single seniors and to $332 a month for couples. The province says the maximum increase amounts to nearly $1,000 per person in 2023. Monthly GAINS payments range between $2.50 and $83.

Cable said CanAge would like the province to make the "extra benefits" permanent but it should review the increase to ensure it doesn't jeopardize other government financial supplements for seniors.

She said the increase will help seniors directly because it is not a tax break and CanAge is "very thankful" to see the increase. The money will help to reduce the isolation that many low income seniors experience, she added.

"It is cash in the pocket. It's not just a tax credit," she said.

"This is a great start because it was astounding low before. The payments could range from $2.50 extra to $83 extra. We're not talking a vast amount of money here. Clearly doubling that is going to make a difference," she added.

"Is it going to make enough of a difference? We're going to have to wait and see. This is better. But we are still worried about people who may fall through the cracks."

People who may fall through the cracks are those who don't qualify, she said.

Finance Minister Peter Bethlenfalvy told reporters on Nov. 14, after he unveiled the increase in the fall economic statement in the Ontario legislature, that the move will benefit 200,000 low income seniors. Each senior who qualifies will receive a maximum of up to $1,000 more a month and the money will help in "these challenging times," he said.

"We have to recognize that inflation is very hurtful to many on fixed incomes and on lower incomes," Bethlenfalvy said.

Payments under GAINS, a monthly, non-taxable benefit to low-income Ontario seniors, are provided on top of the Old Age Security (OAS) pension and the Guaranteed Income Supplement (GIS) payments.

To be eligible for GAINS payments, a person must:

- Be 65 years of age or older.
- Have lived in Ontario for the past 12 months, or for 20 years since turning age 18.
- Have been a Canadian resident for 10 years or more.
- Receive the federal OAS pension and GIS payments.
- Have an annual private income of up to $1,992, if you are a single senior, or up to $3,984 if you are a senior couple. Private income may include money from such sources as a private pension, the Canada Pension Plan, or bank interest.



முனைவர் பால. சிவகடாட்சம்

# படித்ததும் கேட்டதும் 58

இளம்பருவத்தில் காதலிக்காக எதையும் செய்யத்துணியும் காதலன் காலம் செல்லச் செல்ல அவளைக் கவனிப்பதைக் குறைத்து விடுவான். எதற்கெடுத்தலும் அவளைக் குறைகூறுவதே அவனது வழக்கம் ஆகிவிடும். இதைத்தான் “வேண்டாப் பெண்டாட்டி கைபட்டால் குற்றம் கால் பட்டால் குற்றம்” என்று நம்மவர்கள் கூறிவைத்தார்கள்.

தனது தோழியின்மேல் முன்புபோல் அன்பு பாராட்டுவதில்லை என்று தோழியின் கணவனைக் குற்றம் சாட்டுகிறாள் ஒருத்தி.

அன்று என் தோழி உமக்கு வேப்பங்காயைத் தந்தாலும்
அது தித்திக்கும் வெல்லக்கட்டி என்றீர் இப்போதோ
பாரியின் பறம்பு மலையின் குளிர்ந்த ஊற்றுநீரைத்
தந்தாலும்
வெப்பமுடன் உப்பும் கரிக்கின்றது என்கிறீர்
ஐயனே உம்முடைய அன்பு இதுதான் போலும்
மிளைக் கந்தனார் என்னும் சங்கப்புலவரின்
குறுந்தொகைப் பாடல் இது.

வேம்பின் பைங்காய் என் தோழி தரினே
தேம்பூங் கட்டி என்றனிர் இனியே
பாரி பறம்பின் பனிச்சுனைத் தெண்ணீர்
தைஇத் திங்கள் தண்ணிய தரினும்
வெய்ய உவர்க்கும் என்றனிர்
ஐய! அற்றால் அன்பின் பாலே!
- குறுந்தொகை 196

உண்மையான காதலன் எப்படிப்பட்டவனாக இருக்கவேண்டும் என்பதை மற்றொரு சங்கத்தமிழ் நூலான நற்றிணை எடுத்துரைக்கின்றது:

அண்ணாந் தேந்திய வனமுலை தளரினும்
பொன்நேர் மேனி மணியிற் றாழ்ந்த
நன்னெடுங் கூந்தல் நரையொடு முடிப்பினும்
நீத்தல் ஓம்புமதி பூக்கேழ் ஊர
- நற்றிணை 10

“நிமிர்ந்து நிற்கும் மார்பகங்கள் தளர்ந்து போனாலும் பொன்னிறமான மேனியில் விழுந்து புரளும் கரிய கூந்தல் முழுவதும் நரைத்துவிட்டாலும், இவளைக் கைவிட்டுவிடாதே” என்று தனது ஊர்த் தலைவனிடம் கேட்டுக் கொள்ளுகிறார் ஊர் பேர் தெரியாத ஒரு புலவர்.

இதே நற்றிணைப் பாடலைத் தனக்கே உரிய பாணியில் உவமைகளுடன் தருகின்றாள் ஔவை மூதாட்டி:

ஆயன் என்பது திருமாலையும் அரன் சிவபெருமானையும் குறிக்கும். ஆயன் பதி (வீடு) ஆலம் இலை. அரன் பதி இமய மலை. பெண்களின் வயிற்றுக்கு ஆல் இலையை உவமையாகக் கூறுவதும் பெண்ணின் மார்பகங்களை மலைக்கு ஒப்பிடுவதும் புலவர்களின் வழக்கம். மாயன் (திருமால்) ஊதும் கருவி வெண்சங்கு.

ஆயன் பதியில் அரன்பதிவந் துற்றளகம்
மாயன்ஊ துங்கருவி ஆனாலும் - தூயமணிக்
குன்றுபோல் வீறு குவிமுலையார் தம்முடன்நீர்
இன்றுபோல் என்றும் இரும் - ஔவை: தனிப்பாடல்

“ஆலிலை (ஆயன்பதி) போன்ற வயிற்றில் மலைபோன்ற மார்பகம் (அரன்பதி) வந்து இறங்கினாலும் கருங்கூந்தல் வெண்சங்கு நிறத்தை அடைந்தாலும் இன்று மணிமலை போன்று வீறுடன் எழுந்து நிற்கும் மார்பகங்களை உடைய இவளுடன் இன்றுபோல் என்றும் வாழ்வாயாக” என்று திருமணநாளன்று மணமகனை வாழ்த்தும் ஔவையின் பாடல் இது.





## May you live forever like today

A lover who will do anything for his girlfriend in his youth will eventually become less attentive to her. It becomes his habit to blame her for everything. There is a proverb in Tamil, "when the wife is unwanted it becomes an offence whether her hands touch him or feet touch him. In one of the poems in Kurun -thokai, a Sangam anthology, a mature lady accuses her friend's husband for not loving his wife any longer in the way he liked her before.

Even if my friend gave you the neem fruit that day
You said it tastes like molasses
Now she brings the cold fresh water from the spring of Chief Pari’s mountain
You say it is warm and salty
Is this your love, sir?

- Milaik Kanthanar: Kurunthokai 196

An anonymous poet in Natrinai begs his chieftain not to abandon his wife when she becomes old.

"Do not abandon her ever even when her now upright breasts sag and the black hair draping on her shining body turns full grey."

The female poet Auvai gives the same advice with metaphors in her own style.

This is how Auvai greets a bridegroom on his wedding day.

"Live forever as if today even when this young girl’s mountainous breasts descend on her banyan leaf-like belly and her hair attains the color of conch.

## சுருட்டுக் கைத்தொழிலும்... (27ம் பக்கத் தொடர்ச்சி )

இன்னுமொரு சிறுபகுதியைத் தாமாகவே தமக்குள் ஓர் கூட்டுறவு அமைப்பை உருவாக்கி ”கிடுகுக் கொட்டில் நிலையில் சனசமூக நிலையங்களை அமைத்தனர்.

சமூக வலுவூட்டல் (Social Mobilization) என்றெல்லாம் இன்று வெளிநாட்டு, உள்நாட்டு அரச சார்பற்ற நிறுவனங்கள் அடிக்கடி கூறுகின்றன. எழுத வாசிக்க, அறிவு குறைந்த அந்த ஏழைத் தொழிலாளர்களிடம் அது அன்றைய நாள்களில் மிகச் சிறப்பாக இருந்தது.

உருவாக்கப்பட்ட சனசமூக நிலையங்களில் தினப் பத்திரிகை - கள், வாரமலர்கள் என ஒரு தொகைப் பத்திரிகைகள் வாசிப்புக்கென இடப்படும். அக்காலத்தில் இப்போதையதைப் போல கிராம மக்களிடம் பணவசதி இருக்கவில்லை. ஏழ்மை காரணமாகப் பத்திரிகை வாங்கும் வசதி இருக்கவில்லை.

அதனால் சனசமூக நிலையங்களில் பத்திரிகை வாசிக்கச் செல்வார்கள். ஊர்கூடும் ஒற்றுமை மன்றமாகவும் இந் நிலை - யங்கள் இருந்ததால் மக்கள் பெருவிருப்புடன் இவற்றிற்குச் சமூகமளிப்பார்கள். ஒரு பத்திரிகையைக் காவல் காத்து நின்று வாசித்தனர். பத்திரிகையின் இதழ்களைப் பாகம் பிரித்து ஒரே நேரம் பலர் வாசித்தனர். சனசமூக நிலையங்கள் அதிகமாக ஆலமரம், அரசமரம், வேப்பமரம் போன்றவற்றின் கீழ்தான் இருந்தன.

அங்கு மூத்தோர் ஒரு வட்டமாகவும், இளையோர் வேறொரு வட்டமாகவும் இருந்து வாசிப்பார்கள். நட்பு பரிமாறும் களமொ - ன்று உருவாகி புதினக் கதைகள் கதைக்கும் களமாகவும் கிராமியக் கூட்டுறவின் அடையாளமாகவும் கிராமங்கள் இருந்தன. இப்போதையதைப் போல “கடிகாரம் ஓட முன் நீ ஓடு” என்ற அவசர உலகம் அப்போது இல்லை. யுத்தத்தின் சத்தங்கள் எதுவும் கேட்காத அமைதி நிறைந்த வசந்தத்தின் பொற்காலம் அது.

அக்காலத்தில் வறுமை உயர்வாகவும், கல்வியறிவு வீதம் குறைவாக இருந்தமையே சமூக ஒற்றுமைக்கான களமாக அமைந்ததாக இன்றைய மூத்தோர் நினைவு கூருகின்றனர். இன்று பணவசதி, கல்வியறிவு இரண்டுமே கூடியதால் நானா, நீயா பெரிதென்ற போட்டியில் சமூக ஒற்றுமை பாதிக்கப்படு - வதாக சமூக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

சுருட்டுச் சுற்றிய அந்த ஏழைத் தொழிலாளர்கள் தமது பிள்ளைகள் கல்வியறிவில் பண்பில் உயரவேண்டுமென ஆர்வப்பட்டனர். அதற்காகக் கடுமையாக உழைத்தனர். “பண்ணிய புண்ணியம் பயிரில் தெரியும்” என்பது போல அவர்களது பிள்ளைகள் கல்வி, கேள்வி, அறிவு, பதவி யாவற்றிலும் உயர்ந்தார்கள்.

யாழ்ப்பாணத்தின் கல்வி எழுச்சிகளில் இவ் ஏழைச் சுருட்டுத் தொழிலாளர்களும் மறக்க முடியாத ஒரு பாகம்தான். யாழ்ப்பாணத்தின் கல்வி எழுச்சியின் ஒரு பாகமான வாசிப்புப் பண்பாடு வளர உழைத்த இந்த ஏழைச் சுருட்டுத் தொழிலா- ளரின் நல்ல மனமும், அறப் பண்புகளும் கால வெள்ளத்தில் அள்ளுண்டு போகக் கூடாதல்லவா! மூத்தோரின் உயர்ந்த உள்ளத்தைப் போல அவர்கள் விட்டுச் சென்ற பண்புகளும் எமக்கு என்றும் முன்னோடியானவை.

## ரொறன்ரோவில் எண்பது பொலிசார் விசேட பணியில்

ரொறன்ரோ போக்குவரத்து பேருந்துகளிலும், சப்வே எனப்படும் ரயில் நிலையங்களிலும் அண்மைக்காலங்களில் அதிகரித்து வரும் திடீர் தாக்குதல் சம்பவங்களைக் கட்டுப்படுத்த எண்பது பொலிசார் சிறப்புச் சேவையில் அமர்த்தப்பட்டுள்ளனர். இவர்கள் பிரதான போக்குவரத்துச் சேவை நிலையங்களில் பணியை கடந்த மாத இறுதியில் ஆரம்பித்தனர். இது தவிர ரிரிசி நிறுவனத்தின் விசேட காவல் பணியினரும் மேலதிக கண்காணிப்புச் சேவைக்கு உள்வாங்கப்பட்டுள்ளனர். பொலிசாரின் கண்காணிப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதைக் கருதி பொதுமக்களும் பயணிகளும் அசட்டையாக இருக்கக் - கூடாதெனவும், எப்போதும் விழிப்பாக இருக்க வேண்டுமெனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. தாக்குதல்களை மேற்கொள் பவர்கள் ஒருவித மனநோயின் தாக்கத்துக்கு உள்ளாகியிருக்கலாமென கருதப்படுகிறது.





# வாகன விபத்தில் காயமடைந்து விட்டீர்களா?

## அனுபவசாலிகளின் ஆலோசனை பெற்றபின் உங்கள் முடிவை எடுங்கள்.

**MATRIX LEGAL SERVICES**
PROFESSIONAL CORPORATION



## Even if the accident is your fault:



Employed • Unemployed
Passenger • Pedestrian
Public transit
cyclist

WE ARE HERE TO HELP YOU

## இலவச ஆலோசனைகளுக்கு:

**தீபன்**

**24 Hours Direct Line**

**(416) 831-4444**
**(416) 505-9804**

**2190 Warden Ave., Suite 202, Toronto, ON M1T 1V6**


நந்தா உணவகம்
NANTHA RESTAURANT
Best Caters in Town
NANTHA TAKEOUT & CATERING
TAKE YOUR FAVOURITE MEAL
AT OUR RESTAURANT
Bridlewood Mall
UNITS 105 & 106 - 2900 WARDEN AVE, SCARBOROUGH, ON M1W 2S8
Middlefield & Steeles
UNIT 2 - 2002 MIDDLEFIELD RD MARKHAM, ON L3S 1Y5
Kipling & Steeles
UNITS 17 & 18 - 5010 STEELES AVE W, ETOBICOKE, ON M9V 5C6
OPENING SOON
2200 BROCK ROAD, PICKERING
2900 MAJESTIC CITY MALL 16-9 FOOD COURT
416 - NANTHA - 1
416-626-8421
nanthacatersinc@gmail.com

# NKS Draperies & Blinds

210 Silver Star Road, Unit. 825
(Midland & Finch) Scarborough, ON

**416 321 6420**





- Vertical blinds
- Venetian blinds
- Draperies
- Curtains
- Shutters

உங்கள்
இல்லங்களை
மாளிகையாக்கிட

அழையுங்கள்
**கேதா**

தமது சிறப்பான சேவையினால்
தகுந்த விருதுகளைப் பெற்ற நிறுவனம்



## Dr. Shan A. Shanmugavadivel & Associates

## டாக்டர் அ. சண்முகவடிவேல்



* Orthodontics  * Implants  * Cerec Crowns

பற்களை ஒழுங்கு செய்தல், 'இம்பிளான்ற்' சிகிச்சைகளில் கனடாவில்
பயின்ற பல வருட அனுபவமுள்ள குடும்ப பல் வைத்தியர்.

**MONDAY - FRIDAY**

**(416) 266-5161**

(Near Kennedy Subway - Rainbow Village Building)

**RAINBOW VILLAGE DENTAL OFFICE**

2466 Eglinton Avenue East, Unit #7
Scarborough, Ontario M1K 5JB



டாக்டர் எம்.கே. முருகானந்தன்

# சீனி மோகம்

அருகில் இருந்தவர்கள் இவரை ஆச்சரியமாகப் பார்த்தார்கள். தொழில்சார் அமைப்பின் செயற்பாட்டுக் குழுக் கூட்டம் நடந்துகொண்டிருந்தது. பெரும்பாலானவர்கள் சீனி போடமல் தேநீர் குடித்தார்கள். ஒரு சிலர் ஒரு கரண்டி மட்டும் போட்டார்கள். இவர் மட்டும் மூன்று கரண்டி சீனி போட்டு நாக்கைச் சப்புக்கொட்டினார்.

Sugar is an addiction என்பதற்கு இவர் ஓர் உதாரணம். இப்படிச் சீனி குடிப்பவருக்கு நீரிழிவு வந்தால் என்னவாகும். இனிப்பே சாப்பிடாமல் மாய்ந்து போவாரா? செயற்கை இனிப்புகள் கிடைக்கின்றனவே! அவற்றைச் சேர்த்துக் கொள்ளலாமா?

அமெரிக்காவின் உணவு மற்றும் மருந்துகளுக்கான அதிகார சபையானது acesulfame potassium, aspartame, saccharin, sucralose, neotame, and advantame ஆகிய செயற்கை இனிப்புகளுக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது. இவற்றில் பல இலங்கையிலும் கிடைக்கின்றன.

நீரிழிவாளர்களுக்கும், உடல் எடை அதிகரித்தவர்களுக்கும் சீனி நல்லதல்ல. காரணம் அதில் கலோரி வலு அதிகம். குருதிச் சீனியின் அளவையும் உடல் கொழுப்பையும் எடையையும் அதிகரிக்கும். அத்தகைய இனிப்புப் பிரியர்களின் தேவைகளை ஈடுசெய்யவே, கலோரி வலுக் குறைந்த இனிப்புகளான செயற்கை இனிப்புகள் சந்தைக்கு வந்தன.

இவற்றின் நன்மை என்னவெனில் கலோரி வலு குறைவாக இருக்கும். அதே வேளை அவற்றின் இனிப்புச் சுவையானது சீனியை விடப் பல மடங்கு அதிகமாகும். உதாரணமாக 30 மில்லி கிராம் அளவேயான aspartame 5 கிராம் அளவு சீனியின் இனிப்புச் சுவையைக் கொடுக்க வல்லது.

எனவே பல நோயாளர்கள் தாங்களாகவே அல்லது மருத்துவரின் ஆலோசனையுடன் அத்தகைய செயற்கை இனிப்புகளை உணவு மற்றும் நீராகாரம் போன்றவற்றில் சேர்த்துக் கொள்கிறார்கள்.

ஒரு கல்லில் இரு மாங்காய்கள். இனிப்புச் சுவையை உண்ண முடிகிறது. ஆனால் அதே நேரத்தில் இரத்தத்தில் சீனியின் அளவு அதிகரிக்காது. நீரிழிவு கட்டுப்பாட்டில் இருக்கும்.

செயற்கை இனிப்புகள் பாதுகாப்பானவையா என்பதுதான் பலரின் மனத்தை அரிக்கும் சந்தேகம். சில காலத்திற்கு முன் வந்த சில ஆய்வுகள் சிகப்பு சமிக்ஞை காட்டின.

கர்ப்பமாயிருக்கும் பெண்களுக்கு இது ஆபத்தாக முடியலாம் என்றது ஒரு ஆய்வு. காலத்திற்கு முந்திய மகப்பேறு நிகழலாம் எனவும் அஞ்சப்பட்டது. சுண்டெலிகளில் செய்யப்பட்ட மற்றொரு ஆய்வானது அதிகளவில் செயற்கை இனிப்புகளை உண்பதால் சுண்டெலிகளில் புற்றுநோய் தோன்றுவதற்கான வாய்ப்பை அதிகரிக்கும் என்பதுடன் நீரிழிவு தோன்றுவதற்கான சாத்தியமும் அதிகம் என்றது.

ஆயினும் இந்த ஆய்வுகளை மனிதர்களில் இதுவரை செய்து நிரூபிக்கப்படவில்லை. இந்த நிலையில் சந்தேகங்களைத் தெளிவிப்பதற்காக ஐரோப்பிய உணவு பாதுகாப்பு அதிகார சபையானது (European Food Safety Authority) அத்தகைய இனிப்புகளின் பாதுகாப்புத்தன்மை பற்றிய ஒரு மீள் ஆய்வை ஆரம்பித்தது.

மேற்படி மீள்ஆய்வு இன்னமும் தொடர்கிறது என்றபோதும் அஸ்பார்டேம் (aspartame) என்ற செயற்கை இனிப்புப் பற்றிய அறிக்கை 2015 ஜனவரியில் வெளியிடப்பட்டுள்ளது. 40 மில்லி கிராம் அளவைத் தாண் டாத அஸ்பார்டேம் இனிப்பை உட்கொள்வதால் ஆபத்துகள் ஏதும் இல்லை என அது முடிவு கூறியுள்ளது.

பிரான்சில் செய்யப்பட்ட மற்றொரு (Agency for Food, Environmental and Occupational Health & Safety) ஆய்வும் பச்சை விளக்குக் காட்டியது. செயற்கை இனிப்புகளை உட்கொள்வதால், இனிப்புச் சுவைக்கு பழக்கப்பட்டு அதனால் மேலும் மேலும் இனிப்புப் பண்டங்களை தேடி உண்ணும் பழக்கம் ஏற்படுவதும் இல்லை என்கிறது. அதாவது இனிப்பு சுவைக்கு அடிமையாவது (addiction) இல்லையாம். செயற்கை இனிப்புகளை குழந்தைப் பருவத்தில் உண்பவர்கள் வளரும்போதும் அதையே நாடுவார்கள் என்ற பரவலான கருத்திற்கு ஆதாரம் இல்லை என்று மேலும் சொல்கிறது.

எடையைக் குறைப்பதற்கு கலோரி வலுக் குறைந்த இத்தகைய செயற்கை இனிப்புகள் உதவும் எனப் பலரும் நம்புகிறார்கள். அதே நேரம் இவற்றைப் பயன்படுத்துபவர்களுக்கு எடை அதிகரிக்கும் என்கிறன சில ஆய்வுகள்.

பிரான்சில் செய்யப்பட்ட அந்த ஆய்வானது எடை அதிகரிப்பதற்கோ அல்லது எடை குறைப்பிற்கோ செயற்கை இனிப்புகள் காரணம் அல்ல என்கின்றது. இந்தச் செயற்கை இனிப்புகள் குருதியில் குளுக்கோசின் அளவை அதிகரித்து அதன் காரணமாக உடலில் இன்சுலின் சுரப்பதையும் அதிகரிக்கும் என்றொரு நம்பிக்கை இருக்கிறது. அதன் காரணமாக நீரிழிவு ஏற்படுவதற்கான சாத்தியத்தை செயற்கை இனிப்புகள் அதிகரிக்கின்றன என்கிறார்கள்.

ஆனால் அது தவறு என்கிறது பிரான்ஸ் நாட்டின் மேற்கூறிய ஆய்வு. இந்தச் செயற்கை இனிப்புகள் நீரிழிவு ஏற்படுவதற்கு காரணமாக இருக்காது என்பது தெளிவாகிறது. கர்ப்பிணிகள் இவற்றை பாவிப்பதால் கருப்பையில் வளரும் சிசு குறை மாதத்தில் பிறப்பதற்கு அல்லது வேறு ஆபத்துகளை ஏற்படுத்துவதற்கான ஆதாரம் இல்லை.

செயற்கை இனிப்புகள் நிணநீர் தொகுதியில் lymphoma எனப்படும் ஒரு வகைப் புற்று நோயை ஏற்படுத்தலாம் என முன்னர் ஒரு ஆய்வு கூறியது. ஆயினும் பிரான்ஸ் நாட்டின் மேற்கூறிய ஆய்வானது புற்றுநோயை ஏற்படுத்துவதற்கான ஆதாரம் இல்லை எனச் சொல்கிறது.

இருந்தபோதும் இது பற்றி மேலும் ஆய்வு செய்வது நல்லது என்கிறது அதே பிரான்ஸ் அறிக்கை.

செயற்கை இனிப்புகளை உட்கொள்வதால் குறிப்பிடக்கூடிய நன்மைகள் இல்லை என்பதும் அதேநேரம் அவற்றால் ஆபத்தான விளைவுகள் ஏற்படவும் வாய்ப்பு இல்லை என்பதே ஐரோப்பிய மற்றும் பிரான்ஸ் அதிகார சபைகளின் பொதுவான சிபார்சாக இருப்பதை அவதானிக்க முடிகிறது.


OIL CHANGE SPECIAL $34.95
+ Tax & Disposal Fees
Semi-Synthetic Oil Change includes:
Up to 5 L Standard Motor Oil
New Filter
Free Vehicle Inspection
Complete Front & Rear Brake Replacement or $25 off on each
$50 OFF
FREE!
BRAKE OR SHOCK INSPECTION
LIMITED TIME OFFER
SEE STORE FOR DETAILS
MY MECHANIC
இப்போது
இரண்டு இடங்களில்!
MY MECHANIC AUTO & TIRE
4530 Steeles Avenue East
Markham, ON L3R 0L2
905-946-1000
1095 Ellesmere Road,
Scarborough ON M1P 2WP
416-757.1000
info@mymechanicauto.ca
mymechanicauto.ca


உங்களுக்குத் தெரியும்,
நம்பிக்கையுடனான தரமான சேவைகள்..
தகுதியான வெற்றிகளுக்கான
தரமான தெரிவு
On high with your thoughts
PRO MAR Ltd.
AWARDS & PROMOTIONS
நகரின் முன்னணித் தமிழர் நிறுவனம்
இப்பொழுது
வீடு விற்பனைத்
துறையிலும்
www.promarawards.com 416-291 2344
585 Middlefield Rd Unit # 3, Scarborough, ON., M1V 4Y5

ISSN 1206-0585

